458

தொழில்

INDUSTRY FORTNIGHT

மாதம் இருமுறை

1- NOV 1958
MADRAS

458
4-5

1—11—58

ஆசிரியர்: K. பெருமாள் உடையார்

விலை
25 நயா



தீபாவளி விற்பனை

உயர்ந்தரக மத்தாப்பு தினுசுகள், பட்டாஸ்கள் வியாபாரிகளுக்கு வழக்கப்படி இவ் வருஷமும் எம்மிடம் கிடைக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

—: விற்பனை டிப்போ :—

P. ஹூசேன்ஷா & சன்ஸ்

(பூரண உரிமையாளர்)

P. H. முகமது நஸீருத்தீன்

டால்மியா சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்

G I பைப் & பைப் பிட்டிங்ஸ் வியாபாரம், இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்.

பாலக்கரை ரோடு, திருச்சி-8.

தபால் பெட்டி நெ. 456 போன் : 786 தந்தி : HARDWARE

தொழில்

இந்த இதழில்

		பக்கம்
தலையங்கம் :		
நீதி நிலைக்கும்!	...	3
உணவு உற்பத்தியில் சுய முயற்சி	...	4
படக்கதை		8
தொடர் கதை :		
இணைந்த உள்ளங்கள்	...	9
சிறு தொழில்கள்	...	14
சிறு கதைகள் :		
காதல் பலி	...	17
வென்றது யார்?	...	21
கவிதை :		
தொழிற் கல்வி வருக!	...	25
சினிமா விமர்சனம் :		
நீலாவுக்கு நெறஞ்சமனசு	...	31

MADRAS MEDICALS

53, Edapalayam St., Madras-3.

P. B. No. 2328,

WHOLESALE DEALERS IN

ALL DRUGS,

PATENT MEDICINES,

SPIRITUOUS PREPARATIONS,

TABLETS OF ALL KINDS,

ANTIBIOTIC ITEMS,

INJECTUBS & COMMON AMPS,

EMPTY BOTTLES & SURGICAL

INSTRUMENTS ETC. ETC.

SUPPLIERS TO

GOVT. GENERAL HOSPITALS,

GOVT. HOSPITALS &

GOVT. DISPENSARIES,

TEA & COFFEE ESTATES,

MISSION & PRIVATE HOSPITALS

&

DOCTORS ETC. ETC.

Telegrams: MARIGOLD MADRAS Phone: 31738

K. PERUMAL UDAYAR

IMPORTER, EXPORTER & MANUFACTURERS' REPRESENTATIVE

Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை, இறக்குமதி செய்து கொடுக்கிறோம்

K. பெருமாள் உடையார்

55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.

K. PERUMAL UDAYAR

Scrap Merchant and Iron & Steel Fabricator,

34, Wall Tax Road, Madras-3.

முஸ்தபா மார்ட்

இரும்பு வியாபாரம்

(அரசாங்க அங்கீகாரம் பெற்ற பேப்ரிகேட்டர்)

புதுக்கோட்டை.

பலரக வாளிகள், டிரம்கள், கடகால்கள், கவலைசால்கள், ஏற்றசால்கள், சாந்து சட்டிகள், தோசை சட்டிகள், கீல் சட்டங்கள், வண்டிவார் கம்பிகள், மண் வெட்டிகள், மண்வெட்டிபூண், வண்டி வார் வளையம், கோழி முட்டை தொட்டிகள், பூட்டை வாளிகள், நெல் அவியல் அண்டாக்கள், மாட்டு தீனி தொட்டிகள், மாட்டு சங்கிலி, கை திராஸ் விட்டம் செட்டுகளும், பெரிய திராஸ் விட்டங்களும் உற்பத்தி செய்கிறோம்.

பலவிதமான வர்ணங்கள், வார்னிஷ், கற்பூர தைலவகைராக்களும், நிக்கல், பித்தளை, பிளாஸ்டிக் கதவு கைப்பிடிகள், தாழ்ப்பாள்கள், பூட்டு ரகங்கள், அட்டை கீல், ஸ்குரூ வகைராக்கள், இன்னும் பலரக கட்டிட சாமான்களுய் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்பனை செய்து வருகிறோம்.

பா. முகமது இஸ்மாயில்

பூரண - உரிமையாளர்,

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1	சென்னை, 1—11—58	இதழ் 13

நீதி நிலைக்கும்!

பாகிஸ்தானில் நடந்த சம்பவம் இதர நாடுகளுக்கு ஓர் படிப்பினையாகிவிட்டிருக்கிற தென்பது மிகையல்ல. பதவியும் செல்வாக்கு மிருந்து விட்டால் (நீடூழி பதவியில்) நிலைத்துவிடலாம் என்று எண்ணுவோர்க்கு இது ஓர் முன்னெச்சரிக்கையே! பாகிஸ்தான் அரசியல் வாதிகள் பன்னிரண்டு வருடகாலமாய் பதவி வேட்டை யொன்றிலேயே தீவிரங்காட்டி வந்தனர் என்பது வெள்ளிடை. அதன்பயனாய் நாடுமுற்றும் கள்ள வியாபாரங்கள் மலிந்தன. லஞ்ச ஊழல்கள் அதிகரித்தன. கடத்தல் தொழில்கள் மிகுந்தன. கள்ள வியாபாரமும், கடத்தல் தொழிலும் எந்த நாட்டில் தலை தூக்கினாலும், அந்த நாட்டில் அகவிலைக் கொடுமை அதிகரிக்காதிருக்காது. ஏழைகளைச் சுரண்டும் தன்மை தானாகவே உருப்பெற்று விடும். ஓர் சிறு கூட்டம் வளர்ச்சியுறவும், பெருங்கூட்டம் நலிவுறவும் ஏற்படாதிருக்காது. அந்நியன் பிடியிலிருந்து நாட்டை விடுவிப்பது பெரிதல்ல; அதை திறம்பெற ஆட்சிபுரியும் ஆற்றல் இன்றியமையாதது என்பது இப்போது புலனாகாதில்லை.

சுதந்திரம் பெற்றால் பதினைந்து வருடங்களுக்கு சர்வாதிகார ஆட்சிபுரிந்து படிப்படியாய் ஜனநாயக உரிமை வழங்கப்படவேண்டும். அப்போதுதான் ஆட்சி முறை செம்மைப்படும் என்பது நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் அபிப்பிராயம்.

நூறு ஆண்டுகளுக்குமேல் அடிமை வாழ்வில் ஊறித்தேறிப்போனவர்களுக்கு உடனடியாய் ஜனநாயக உரிமையை வழங்கினால் அதைத் தக்கவாறு செயல்படுத்த இயலாது என்பதை உணர்ந்தே நேதாஜி போஸ் தீர்க்க தரிசனமாய் அதைக் கூறினார்.

வெள்ளையர் பிடியிலிருந்து விடுபட்ட இந்தியா, அமெரிக்க ஐரோப்பிய அரசியல் சட்டதிட்டங்களைப் பின்பற்றி ஜனநாயக அடிப்படையில் ஆட்சியைத்துவக்கியது.

அண்டை நாடான இந்தியாவைப் பார்த்து பாகிஸ்தானும் ஜனநாயக போர்வையால் தன் உடலைப் போர்த்துக் கொண்டது.

அமெரிக்க ஐரோப்பிய ஆட்சியாளர்கள் நீண்ட கால அநுபவத்தின் அடிப்

தொழிலுக்கு வந்தனை!

உழவுக்கும், தொழிலுக்கும் தொன்றுதொட்டு வந்தனை செய்து வருவது தமிழகம். உழவை வழிபடப் பொங்கல் விழாவும், தொழிலை வழிபடப் படைக்கல விழாவும கொண்டாடி மகிழ்பவர் தமிழர். படைக்கல விழாவினைத்தான் ஆயுத பூஜை என்றும குறிக்கின்றோம். தொழிலால் வாழ்பவர்கள், வளர்பவர்கள் படைக்கலங்களை வழிபடுவது தமிழ்ப் பண்பு. சென்னையில் பிரபல இரும்புச் சாமான்கள் உற்பத்தியாளர் திரு எம். கண்ணன் அண்மையில் தம் தொழில் நிலையத்தில் படைக்கல விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடினார். தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு கே. ராஜாராம் தலைமை தாங்கினார். அப்போது எடுக்கப்பட்ட படம் "தொழில்" அட்டையில் காட்சி தருகிறது துளையிடும் இயந்திரம் ஒன்றை திரு கே. ராஜாராம் நாயுடு அவர்கள் தம் அருமைக் குழந்தைகளுடன் பார்வையிடுகிறார். திரு. கண்ணன், திரு கே. பெருமாள் உடையார் ("தொழில்" ஆசிரியர்) முதலியோரையும் படத்தில் காணலாம்.

படையில் ஜனநாயகத்தை அமலாக்கி வருகின்றனர்.

இந்தியா அந்நாடுகளைப் பின் பற்றி பேச்சுரிமை, எழுத்துரிமை, (எவனும் எதையும் செய்து விடலாம் என்று எண்ணும் அளவுக்கு இடந்தரும் ஜீவாதார உரிமை) இவைகளை பெருமிதத்தோடு வாரி வழங்கியது.

அதன் விளைவாய் தகுதியற்றவர்களெல்லாம் தான்தோன்றித்தனமாய் பேசவும், எழுதவும் கூடிய துணிவைப் பெற்றனர். சட்ட விரோதச் செயல் புரிந்தவன், தான் செய்த காரியம் ஜீவாதார உரிமைக்குட்பட்டதென்று வாதாடும் அளவுக்கு நிலைமையை சிருஷ்டித்து விட்டிருக்கிறது. அரசியல் மேதையை அரசியல் அறிவு படைத்திராத பாமரனும் பழித்துப்பேசவோ, எழுதவோ கூடிய நிலையை உண்டாக்கி விட்டிருக்கிறது நம் நாட்டு ஜனநாயக உரிமை!

இந்த பல வீனப் போக்குகளின் அடிப்படையில் அரசாங்கத்தை மதிப்பதென்ற தன்மை மறைந்து விட்டது குறித்து நாம் வியப்பதற்கில்லை. அரசாங்கத்தில் ஊழியம் செய்து பிழைக்கும் பலர் அரசாங்க விரோதிகளாய் செயல் புரிகின்றனர். ஊழியம் செய்வது அரசாங்கத்தில்; ஊக்கங்காட்டுவது அதற்கு விரோதமான ஸ்தாபனத்தில். உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யும் இம்மாதிரி ஊதாரிகளை இந்தியாவையன்றி வேறு எந்த நாட்டு அரசாங்கமும் விட்டு வைக்காது. அரசாங்கத்தில் நிறைந்து போயுள்ள இம்மாதிரி புல்லுருவிகளால் பாமரமக்களின் மனநிலையும் படுமோசமாய் மாறிவிட்டிருக்கிறது. மாறுமல் என்ன செய்யும்? அரசாங்க ஊழியனே அரசாங்க எதிர்ப்பு பஜனைப் பாடுகிறுன் என்றுல் அப்பாவிகள் எப்படி அரசாங்கத்தை மதிப்பார்கள்?—நம்புவார்கள்?

வர்த்தகத் துறையிலோ வர்ணிக்க வியலாத சூதாட்டநிலை ஓங்கி விட்டது. அன்ருட தேவைக்குரிய உணவுப் பண்டங்களின் விலை அளவுக்கு மிஞ்சியதாய் விட்டதால், ஏழைச் சமுதாயம் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறது. அரசியல்வாதிகள் பதவி வேட்டையில் நாட்டத்தைக் காட்டிவருகின்றனரே யன்றி, அகவிலைக்கொடுமையைத் தணிப்பது பற்றி அவர்கள் அக்கறையே கொள்ளவில்லை. அவர்கள் பசியறியாதவர்கள் தானே? அவர்களுக்குத் தேவை பறிபோய் விடாதவாறுள்ள பதவி, தேசியவாதிகளின் இந்தப் பதவிப் பித்தைப் பற்றி அண்மையில் மத்திய அரசாங்க போக்கு வரத்து மந்திரி ஸ்ரீ. எஸ். கே. பட்டீல் கூறியது ஊன்றி கவனிக்கத்தக்கதாகும். "இந்தியாவில் ஜனநாயகமும், காங்கிரசும் பிழைக்க வேண்டுமானுல், சில முன்னணி காங்கிரஸ்தலைவர்களாவது பதவியிலிருந்து விலகி, ஸ்தாபன வேலைகளில் ஈடுபடவேண்டும்"

"சுதந்திரத்தை அடுத்து முன்னணி காங்கிரஸ் தலைவர்கள் பலரைப் பதவியேற்க விட்டது காங்கிரஸ் கட்சி செய்த தவறு"

"பிரிட்டிஷ் ஆட்சி வாபஸானவுடன் முன்னணித் தலைவர்கள் பதவி யேற்றது அவசியமே யென்றுலும் அறிவாற்றலில் சிறந்த தலைவர்கள் போய் விட்டதால் காங்கிரஸ் ஆத்மா இல்லாத ஸ்தாபனமாய் விட்டது."

ஒரு தாய் வயிற்றில் பிறக்கும் இரட்டைக் குழந்தைகளைப்போல் இந்தியாவும், பாகிஸ்தானும் ஒரே நாளில் சுதந்திரம் பெற்றன. அண்டை நாடான இந்தியாவைவிட தான் எல்லாத் துறைகளிலும் முன்னேறிவிட வேண்டுமென்ற பேராசையால் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தது பாகிஸ்தான்.

'இன்றைக்கிருப்போரை நாளைக்கிருப்பரென்றெண்ணவும் திடமில்லையே' என்பான் இந்திய தத்துவி! அந்த ஒரு நிலையை பாகிஸ்தான் மந்திரி சபைகள் மாற்றமடைந்து வந்த சம்பவங்களிலே காண முடிந்தது.

பதவி வேட்டைக்காரர்களின் கொட்ட மோங்கிய காரணத்தால் பாகிஸ்தானில் பஞ்சநிலை பரவியது. பஞ்சம்

யாருக்கு? பணக்காரர்களுக்கோ, பதவி வேட்டைக் காரர்களுக்கோ அல்ல. பாமர மக்கள் பரிதவித்தனர். ஏழைகள், பணக் காரர்கள் என்ற நிலை ஏற்ற முற்றிருந்த அங்கே ஏழைகள் உள்ளம் எரிமலைபோல் குமுறிக்கொண்டிருந்தது. அந்தக் குமுறல் பீறிட்டெழுந்திருந்தால் படுகளத்தையே அங்கு கண்டிருக்கலாம். நல்லவேளையாய் அப்படி ஏற்பட்டு விடவில்லை.

ஜனாதிபதி (?) மேஜர் இஸ்கந்தர் மிர்ஜாவின் எதிர்பாராத இராணுவ நடவடிக்கைகள் பதவிவேட்டைக்காரர்களுக்கும், கள்ள பேரக்காரர்களுக்கும் நாசசக்திகளாய் முளைத்தன. கொட்ட மடங்கினர்; குறுகியொடுங்கினர். ஏழைகள் இறும்பூதெய்துகின்றனர். ஒட்டி உலர்ந்த வயிறு நிறைய உண்டு களிக்கின்றது.

சட்டசபை கலைக்கப்பட்டது. மந்திரி சபை மறைக்கப்பட்டது. அதிகாரிகளின் ஆணவப்போக்கு அடக்கி யொடுக்கப் பட்டது, கள்ளபேரக்காரர்கள் காராக் கிரகவாசிகளாக்கப்பட்டனர். கள்ளவியாபாரிக்கு கசையடி, பதுக்கல் காரர்களுக்கு மரணதண்டனை யென்ற சட்டங்கள் பிறப் பிக்கப்பட்டதால், அகவிலை கொடுமை மறைந்தது. பதுக்கி வைத்திருந்த பல கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் வெளிவந்துள்ளதாய் தகவல் கிடைத் திருக்கிறது. சாதாரண சேவகனிலிருந்து கவர்னர் வரை அடக்குமுறைக்கு இலக் காயினர்.

ஏழைகளின் குமுறல் இவ்வாறு வேற்றுருவில் வெடித்தது.

பாகிஸ்தானில் நடந்துள்ள இந்த மாறுதலைக் கண்டு இந்திய கம்யூனிஸ்ட்கள் வெறுப்படைகின்றனர். இந்தியாவிலுள்ள முஸ்லீம் லீக் குறை கூறுகிறது. மற்ற கட்சிகளும் கண்டிக்கின்றன. கள்ள பேரக்காரர்கள், பதவிவேட்டைக்காரர்கள் கொட்டமடங்கினரே யென்ற எண்ணத்தைக்கூட எந்த கட்சியும் கொள்ளாதது விந்தைமாத்திரமல்ல, விபரீதமுங் கூட.

சட்டசபையில் அடிதடி; சபா நாயகரை பைத்தியமென்று தீர்மானித்தது.



வ. உ. சி. நினைவு நாள்

தமிழ்நாட்டின் தனிப்பெருந் தலைவரும் கப்பலோட்டிய தமிழனென எல்லோர்இதயங்களிலும் இடம்பெற்றுள்ளவருமான ஸ்ரீ வ. உ. சிதம்பரனாரின் நினைவு நாள் 18-11-58ல் வருவதால் அந்த நந்நாளைசிறப்புறகொண்டாடி அன்னாருக்கு நமது அஞ்சலியைச் செலுத்துவோம். ''தொழில்'' வ. உ. சி. மலராக வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

உதவி சபா நாயகரை அடித்துக்கொன்றது; இவையெல்லாம் சாதாரண சம்பவங்கள் அல்லவே! அந்த நிலையை அலட்சியமாய் எண்ணியிருந்தால் நாடு முற்றும் கொலைக்களமாக நாள் பிடித்திருக்காது.

இந்த இராணுவ நடவடிக்கையைக் கண்டு நம்நாட்டு அரசியல் வாதிகளில் குறிப்பானவர்கள் சூசகமாய் எச்சரித்திருப்பதில் பொருளிருக்கிறது.

உண்மையான ஜனநாயகம் நிலைக்க சமுதாயத்தில் வறுமை நிலை தலைகாட்டாது செய்தல் அவசியம். அரசியலில் வெறுப்புக் கொள்ளாத சமுதாயத்தை சிருஷ்டிப்பது தான் உண்மையான ஜனநாயகமாய் இருக்கமுடியும்.

'நீதிநிலைக்கும்!' என்பது நம்நாட்டினரின் அசைக்க முடியாத நம்பிக்கை. அது பிழை படுவதில்லை. நீதி நிலைக்கும் என்ற அந்த நேர்மையான சொல்லை முன்னிருத்தி சமத்துவத்தை சகல துறைகளிலும் நிலைச்செய்யும் ஜனநாயக வாழ்வை வரவேற்போம்.

உணவு உற்பத்தியில் சுய முயற்சி

ஸ்ரீ M. S. சிவரர்மன் I. C. S. அவர்களின் கருத்துரை

நம் நாட்டுமக்களில் பெரும்பாலோர் விவசாயத்தை முக்கியத் தொழிலாகக் கொண்டிருப்பதால், பிற தொழில்கள் வளரவும், மக்களின்வாழ்க்கைத் தரம் உயரவும் துணைபுரியும் வகையில் விவசாயம் அமைதல் வேண்டும். ஏராளமான மனிதசக்தி நம் நாட்டில் இருந்தபோதிலும், அதனைச் சரிவரப்பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. காரணம், இலாபகரமாக பயிர்த்தொழில் செய்யத் தகுதியான நிலங்கள் போதுமர்ன அளவு இல்லை. டாக்டர் பர்ன்ஸ் என்பவர் "இந்தியாவின் விவசாய வளர்ச்சிக்கு ஏற்ற தொழில் நுட்பமுறைகளைப் பற்றிய" தன் விமர்சனத்தில் "இந்தியாவின் மண்வளம் அதிக உற்பத்திக்கு இடமின்றி, உற்பத்தி நாளடைவில் குறைந்துகொண்டு போகாமல் ஒரு தாழ்ந்த நிலையில் நிலைத்திருக்கிறது" என்று கூறுகிறார்.

அதிக உற்பத்தியின் அவசியம்

நம் நாடு முன்னேற வேண்டுமானால், நாளடைவில் பெருகிவரும் மக்கள் சமுதாயத்தைப் பிடித்திருக்கும் பற்றாக் குறை நீங்கி, எல்லோருக்கும்போதுமான அளவு உணவும் உடையும் கிடைக்கின்றவகையில் விவசாய உற்பத்திப் பெருகவேண்டும் தற்போதைய தொழில்களுக்கும், வருங்காலத்தில் அமைக்கப்படப்போகின்ற தொழில்களுக்கும் தேவையான மூலப்பொருள்களையும் நம் நிலத்திலேயே உண்டாக்கிக்கொள்ள வேண்டும். தொழில் துறையில் மிகவும் பிற்போக்கான நிலையில் உள்ள நம்நாடு, அதன் முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமான அந்நியச் செலாவணியைப் பெற, மற்ற நாடுகளில் தேவைப்படுகின்ற விவசாயப் பொருள்களை ஏற்றுமதி செய்யும்அளவுக்கு நம் நிலத்தின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல்வேண்டும். மேலே குறிப்பிட்ட தேவைகளையெல்லாம்பூர்த்தி செய்யவேண்டுமானால்முதல் ஐந்தாவது ஆண்டுத் திட்டத்தின் இறுதியில் இருந்த வருடர்ந்திர உற்பத்தியான 65 மில்லியன் டன்னைவிட 1504 மில்லியன் டன் அதிகம் உற்பத்திசெய்யவேண்டியிருக்கிறது.

உற்பத்தியைப் பெருக்க வழி

நம் நாட்டின் மண் வளத்தைப் பற்றி டாக்டர் பர்ன்ஸ் அவர்களின் கருத்து உண்மையென்றால், மேலே குறிப்பிட்ட அதிகமான அளவு உற்பத்தியை நாம் எங்ஙனம் பெற முடியும்? குறைந்த உற்பத்தியாலும் பொருளாதார நெருக்கடியாலும் ஏற்பட்டிருக்கின்ற அவல நிலையைப் போக்க நாம் வழிவகைகளைக்கண்டு பிடிக்க வேண்டும்.

வாழ்க்கையில், எல்லா உயிர்களின் வளர்ச்சிக்கும் அத்தியாவசியமாகத் தேவைப்படுவதைப்போல், பயிர்களுக்கும் அவைகள் செழிப்பாக வளர சில முக்கியமான சத்துப்பொருள்கள் தேவைப்படுகின்றன. அத்தகைய சத்துக்களில் முக்கியமானதான நைட்ரஜன் நிலத்தில் போதுமான அளவு இருத்தல்வேண்டும். விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால் நிலங்களின் நைட்ரஜன் பற்றாக் குறையைப்போக்க நாம் முயற்சிக்கவேண்டும். பொதுவாக நம் நாட்டின் மண் வளம் குன்றிக் கிடக்கின்ற இந்நிலையில் குறிப்பிட்ட ஒரு நிலத்திற்குமட்டும் அதிக எருவைப்போட்டு, கணிசமான உற்பத்தியை உண்டாக்கிக் காட்டுவதால், நாட்டின் மொத்த உற்பத்தி பெருகிவிடாது. நிலத்திற்குத் தேவையான எருவைப் போதுமான அளவு போட்டு பயிரிடுவதைவிட நூதன விஞ்ஞான முறைகளைக் கடைபிடித்து விவசாயம் செய்வதே சிறந்தது என ஒரு சாரார் கருதுகின்றனர். பயிர்களின் செழிப்பான வளர்ச்சிக்கு ஏற்ற சத்து, நிலத்திற்கு போடப்படவில்லையென்றால், மற்ற எந்த முறையும் குறிப்பிடத்தக்க பலனை அளிக்காது என்பது உறுதி.

நிலத்திற்குத் தேவையான நைட்ரஜன் சத்தை நாம் பல வகைகளில் ஈடுசெய்ய முடியும். அமோனியம் சல்பேட்

K. பெருமாள் உடையார்
ஆசிரியர்: "தொழில்"
போன் 31738
புதிய எண் உபயோகிக்கவும்.

போன்ற உரங்கள் நல்ல நீர் வளமுள்ள, பக்குவமான நிலங்களுக்கு ஏற்ற உணவாகும். ஆனல் நம் நாட்டில் 75 சதவிகித நிலங்களுக்கு போதுமான நீர்ப்பாசன வசதி கிடையாது. இத்தகைய நிலங்களில் அமோனியம் சல்பேட் போன்ற உரங்களை உபயோகித்தால், நிலங்களின் ஈரப்பசையை முன்னதாகவே ஈர்த்து பயிர்களை செழிப்பாக வளரச்செய்யும். ஆனல் பூ பூத்து தானியங்கள் உண்டாகின்ற சமயத்தில் பயிர்களுக்குப்போதுமான ஈரச் சத்து கிடைப்பதில்லை. இதனல் பெருமளவு நஷ்டமே ஏற்படுகின்றது.

நாம் நாட்டின் வளத்துக்கு ஏற்ற எருவாக கால்நடைகழிவுப் பொருள்களையும், (சாணம்) தழைகளையும் ஏற்றுக்கொள்ளலாம்.

ஆனல் சாணத்தின் பெரும்பகுதி எரிபொருளாக உபயோகப் படுத்தப்படுவதால் நிலங்களுக்குப் போதுமான அளவுகிடைப்பதில்லை. எனவே, தழை உரத்தின் மூலமாகத்தான் நம் நிலங்களின் நைட்ரஜன் பற்றுக்குறையைப் போக்க வேண்டும். நம் நாட்டில் பயிர் செய்வதற்குத்தகுதியான 350 மில்லியன் ஏக்கராக்களிலும், ஏக்கர் ஒன்றுக்கு 4 டன்கள் வீதம், நிலத்திற்கு எத்தகைய குந்தகமும் ஏற்படாமல், தழை உரம் உற்பத்தி செய்யப்படல் வேண்டும். அந்தந்த நிலத்திற்குத் தேவையான தழை உரத்தை அங்கங்கேயே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு விவசாயியும் மேலே குறிப்பிட்ட முறையைக் கடைபிடிப்பதின் மூலம் மற்ற உரங்களின் தேவையின்றி உற்பத்தியின் தரத்தை நன்கு உயர்த்த முடியும்.

நிலங்களுக்கு எரு எவ்வளவு அவசியம் என்பதையும், அதை எங்ஙனமெல்லாம் பெறவேண்டும் என்பதைப் பற்றியும் பொது மக்களுக்கு நன்கு எடுத்துச் சொல்ல வேண்டும். நூதன தொழில் நுட்ப முறைகளைக் கடைப்பிடித்து விவசாயம் செய்தால் மட்டும் போதாது. நிலங்களுக்குத் தேவையான எருவினையும் போதுமான அளவு போட வேண்டும் "என்பதை விவசாயிகள் நன்குஉணரும்படி செய்தல் வேண்டும். மேலே குறிப்பிட்ட முறைகளைக் கடைப்பிடித்து பயிரிட்டால் உற்பத்தி தானே பெருகும்,

—✻—

வாளை ஒரு புறம் வீசி எறிந்த பின் என்னை எதிர்ப்பவர்களிடம் கொடுப்பதற்கு அன்பென்ற அமுதம் நிறைந்தசின்னத்தைத் தவிரவேறு எதுவும் இல்லை. அந்த நிவேதனத்தால் தான் அவர்களை எவ்விடம் இழுத்துக் கொள்ள எண்ணியுள்ளேன்.

அடுத்த இதழில் - - ஆரம்பமாகிறது !

இனிக்கும் தமிழில் -
இதயத்தைத் தொடும்
சம்பவங்கள் மலிந்த

இதுதான் காதல்!

—::தொடர் நாவல்::—

எழுதியவர்: "திருமகன்"

கட்டுக் கோப்பான கதை யமைப்பு!
கருத்துச் செறிவுள்ள சம்பவங்களின் தொகுப்பு!
அடுத்து நடப்பவை யென்ன வென்றறியத் தூண்டும்
விறு விறுப்பான நிகழ்ச்சிகள்; இவையெல்லாம் நிறைந்தது:

"இதுதான் காதல்!"

காதலை கானல் நீராய்க் கண்ட
காதலர்களின் சரிதம்.

உண்மைச் சம்பவங்கள்!

1000-ம் ஆண்டில் நார்ஸ்மன் நாட்டைச் சேர்ந்த லீப் எரிக்ஸன் என்ற மாலுமி தன் சகாக்களோடு தொலைதூரம் சென்று ஓர் நாட்டையடைந்தார். வைன்லாண்ட் என்று அதற்குப் பெயரிட்டனர். அது அமெரிக்க நாடாய்த்தான் இருக்க வேண்டுமென்று தற்கால சரித்திராசிரியர்கள் நம்புகின்றனர்.

1492-ல் இந்தியாவைக் கண்டு பிடிக்கப் புறப்பட்ட இத்தாலியரான கிரிஸ்டோபர் கொலம்பஸ் புது உலகமான அமெரிக்காவை கண்டு பிடித்தார். தன் சகாக்களில் ஒருவனான அமெரிகோ வெஸ்புக்கி என்ற இத்தாலியன் பெயரை அந்நாட்டிற்குச் சூட்டினார்.

1607-ல் காப்டன் ஜான்ஸ்மித் என்ற ஐரோப்பியர் உழைப்பாளிகளான 104 நபர்களுடன் வட அமெரிக்காவிலுள்ள வர்ஜினியா நாட்டில் ஜேம்ஸ் டவுனில் குடியேறி பல தொல்லைகளை சமாளித்து சுதந்திர வாழ்க்கைக்கு அடிகோலினார்.





1647-ல் மாஸாஸூஸெட்ஸ் காலனியில் இலவச கல்விச் சட்டம் முதன் முதலில் அமலுக்கு வந்தது. 1620-அகதிகளால் ஸ்தாபிக்கப்பட்டது இந்த ஸ்தாபனம், தற்போது 140,000 பள்ளிக் கூடங்களிருக்கின்றன. 4 - கோடி மாணவர்களும், ஒன்றரைக் கோடி உபாத்தியாயர்களும் உள்ளனர்.

1775-1788 இந்தக் காலத்தில் தான் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஸ்தாபிதமாயின. 1775-ல் இங்கிலாந்தோடு சுதந்திர யுத்தம் நடத்தியது. 1776-ல் சுதந்திர பிரகடனம் செய்தது. 1783-ல் யுத்தம் முடிந்தது. இராணுவ கமாண்டர் ஜார்ஜ் வாஷிங்டன் முதல் ஜனாதிபதியானார்.

1791-ல் ஐக்கிய நாடுகளின் காங்கிரஸ் உரிமைச் சட்டத்தை இயற்றியது. தனியார் உரிமை, வழிப்பாட்டுரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, ஆயுத உரிமை, ஜூரிகள் மூலம் விசாரிக்கும் உரிமை, முறையற்று தண்டித்தலை நீக்கும் உரிமை இவைகள் வழங்கப்பட்டன. (தொடரும்)

தொடர் கதை :

—புலவர் நா. தேவநாதன்—

11. டாக்டர் செல்வநம்பி தேர்தலில் நிற்றல்

ஊரெங்கும் பேச்சு. மருதமுத்துவின் பெயரையும், செல்வநம்பியின் பெயரையும் அந்தத் தெருவின் நீளத்திற்கும் சென்றால் கேட்டுக்கொண்டே செல்லலாம். எதிர்ப்பே இல்லாத வகையில் M.L.A. வாக இருந்து வந்தவர் மருதமுத்து. அவ்வூர் வாசிகள்பலர் செல்வ நம்பியை அணுகி போட்டி யிடுமாறு தூண்டினர்.

மருத முத்துவுக்குத் தன்மீது எவ்வளவு பொறுமை உண்டு என்பது செல்வ நம்பிக்கு நன்றாகத் தெரியும். ஆரம்பத்தில் நன்மை செய்த அவரை இன்று எதிர்த்துப் போட்டியிடுவதா? மனம் துணிய வில்லையே என்று எண்ணி, 'வேறு யாரை யாவது நிற்கச் சொல்லுங்கள். வேறு யாராக இருந்தாலும் எதிர்த்து நிற்பேன். அவரோடு எதிர்த்து நிற்க என்னால் முடியாது' என்று கூறிவிட்டான்.

இதைக்கேட்ட சிலருக்குச் செல்வநம்பி மீதும் சிறிது கோபம் வந்துவிட்டது. உமக்கு அவர் நன்மை செய்ததை மறக்காமல் மனதில் வைத்துப் பூசை செய்யும். அதோடு நின்று விடாமல் ஊர் மக்களின் நன்மை பாதிப்பதைக் குறித்து அவரை எதிர்க்க வேண்டியதுதான் என்றான் ஒருவன். மற்றொருவன் 'உமக்கு அவர் செய்த நன்மையையும், அவர் ஊருக்குச் செய்த தீமையையும், உதவாமையையும் ஒரு துலாக் கோலில் வைத்து நிறுத்துப் பாருங்கள், எந்தப் பக்கம் சாய்கிறது என்பது தெரியும். என்றான் மற்றொருவன்.

செல்வ நம்பி, கொஞ்ச நேரம் பொறுத்து 'பிறகு வாருங்கள், சொல்லுகிறேன்' என்று கூறியனுப்பினான்.

தன்னைச் சார்ந்த சேதுபதி, தென்றல், முல்லை முதலியவர்களிடமும் கலந்தாலோசித்தான். 'நீ எதிர்த்து நிற்பது தான் நல்லது' என்று முடிவு கூறி விட்டனர்.

சிறிது நேரம் பொறுத்து வந்த ஊர்மக்களிடமும் தான் தேர்தலுக்கு நிற்க இசைவது பற்றிக் குறிப்பிட்டு விட்டான் செல்வ நம்பி.

இதைக் கேட்ட மருதமுத்துவுக்கு மனம் கொதித்தது; இந்தச் செல்வநம்பியை முதலிலேயே தொலையட்டும் என்று விட்டு விட்டிருந்தால் இன்று எதிர்ப்புக்கு ஆள் ஏது? ஆகட்டும் பார்க்கலாம். காசு முன் தூசு தான் அவன் என்று எண்ணித் தேர்தல் வெற்றிச் செயலில் தீவிரமாக ஈடுபட்டுவிட்டார். மருதமுத்து, வால் போஸ்டுகாகச் செலவு செய்த பணத்தை மட்டும் ஒரு S.S.L.C. யின் கையில் கொடுத்திருந்தால் ஒரு என்ஜினீயராக வந்திருப்பான். செல்வ நம்பி மட்டும் ஆடம்பரச் செலவும் செய்யவில்லை. தன்னுடைய மருத்துவத் தொழிலைத்தான் செய்துகொண்டு வருகிறான். நாளைக்குத் தேர்தல் முடிவு.

தேர்தல் நெருங்க நெருங்க மருதமுத்துவுக்கு மனக்கவலையும் வளர்கிறது. தன் வீட்

டில் பிழைக்கும் வழியின்றி தங்கியிருந்தவன் தனக்கு எதிரியாக வந்து விட்டானே என்பது அவர் கவலே.

டாக்டருக்காக ஊரில் ஏழை மக்கள் தான் பாடு பட்டுக் கொண்டிருக்கின்றனர். இன்று தேர்தல் நிகழ்ந்து கொண்டுள்ளது.

மருத முத்துவின் மனக் கொதிப்பு, அவரை மரணத்திற்கு அழைக்கும் அள விற்கு உடல் நிலையை மாற்றி விட்டது. படுக்கையில் படுத்த வண்ணம் இருமிக் கொண்டிருந்தார். அப்போது அங்கே ஒரு வன் வந்து நின்ருன். மருதமுத்து அவனைப் பார்த்தார். மேல் மூச்சு இரைத்துக் கொண்டேயிருந்தது. 'சூழ் நிலே எப்படி உள்ளது? என்று கூறி மீண்டும்' பெரு மூச்சு இரைப்புடன் கூறினர். இதைக் கேட்டவன் மருதமுத்துவின் நிலே சிறிது சாந்தமடையட்டும் பேசலாம் என்று எண்ணி இருந்தான். அந்த நேரம் வரையில் சூழ்நிலே மருதமுத்துவுக்குச் சாதகமாய் இல்லேதான். 'உன் மௌனம் பாதகத்தை தான் காட்டு கிறதா?' என்ருர். 'ஆமாம்' என்று வாயில் சொல்லவில்லே அவன். அந்தக் குறிப்புடன் தலேயை அசைத்தான். அவ்வளவுதான் மருதமுத்துவின் உள்ளத்தில் ஒரே புயல். உடம்பின் ரத்த ஓட்டத்தைக் கலக்கியது. இரத்தக் கொதிப்பு ஏற்பட்டு விட்டது.

மருத முத்துவிற்கு மரண வாயில் திறக் கப்பட்டு விட்டது என்று தான் சொல்ல வேண்டும். அவர் நிலே மாறியதை உணர்ந்த கலாவதியும் கனகராசனும் திடுக்கிட்டனர். செல்வ நம்பியினுல் குணமடைந்த நோயா ளிகள் பலர் என்று எண்ணி கலாவதி செல்வ நம்பிக்கு ஆளே விட்டு அனுப்பினுள்.

சென்ற ஆள், செல்வநம்பியிடம் செய்தி யைச் சொன்னுன். செல்வ நம்பிக்குச் சிறிது இரக்கம் தான். இந்தத் தேர்தல் நிகழ்ந்து கொண்டிருக்கும் இச்சமயத்தில் நாம் அங்கு செல்லக்கூடாது என்று எண்ணினுன். பக்கத்திலிருந்த நபர்களும் "நீங்கள் இப் பொழுது அங்கே போகவே கூடாது" என்று தடுத்தார்கள். 'ஆம் போகக் கூடாது தான்' என்று தனக்குள் ஒரு முறை சொல்லி, வந்த வனேப் பார்த்து 'வருவதற்கில்லே' என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

செல்வ நம்பியை அழைக்க வந்தவன் மருதமுத்துவின் வீட்டிற்குச் சென்று வர மறுத்து விட்டார் என்று கூறினுன். இதைக் கேட்டதும் கலாவதிக்குக் கோபம் வந்து விட்டது. உடனே கார் எடுத்துக் கொண்டு செல்வநம்பியின் மருத்துவச் சாலேயை நோக்கி வருகிருள்.

'டாக்டர்! டாக்டர்!' என்று கூறிக் கொண்டே வந்த ஒரு ஏழை, இப்பொழுது கட்டிலில் கொண்டு வந்த கிழவரைக் காட்டி உடனே கவனியுங்கள் உடனே கவனியுங் கள் என்று அவசரத்துடன் கூறினுன். 'டாக்டர்!' என்று சொல்லிக்கொண்டே அதே நேரத்தில் கலாவதியும் காரை நிறுத் திக் காரைவிட்டு இறங்கி வேகமாக வருகி ருள்.

செல்வ நம்பி ஒன்றும் புரியாமல் அப்ப டியே அசைவற்று நின்று விட்டான்.

'டாக்டர் உடனே காரில் உட்காருங்கள் சோதிப்பதற்குக் கூட நேரமில்லே. தாமதம் விபரீதத்தைக் காட்டும் என்ருள் கலாவதி.

செல்வநம்பி, 'கலாவதி நீ வந்த வேலே எனக்குத் தெரியும். உன் தந்தை இந்த நேரம் எனக்கு மட்டுமல்ல, எனக்கு ஓட்ட ளிக்கும் அத்தனே பேருக்கும் பகைவர். நான் வர மறுக்கிறேன்' என்ருன்.

கலாவதி, 'என்ன சொன்னீர்? உண்மை யாக உம் மனசாட்சியோடு இதைச் சொல்லு கிறீர்களா? நான் உங்கள் மீது கொண்டுள்ள அன்புக்காக எனக்காக வாருங்கள். உங்களுக் காக உயிர் வாழும் எனக்காக வாருங்கள். என் தந்தை இல்லாவிட்டால் என் வீடே இப்பொழுது பொலிவிழந்து விடும். செல்வ நம்பி, 'கலாவதி நீயும் நானும் காண்பது பகல் கனவுதான். உன் குடும்பச் சூழ்நிலே யைப் பார்த்தால் உன்னே நான் மணப்ப தென்பது மட்டும் முடியக் கூடிய காரியமா? உன் அப்பன் உயிருடன் இருக்கும் வரை யில், கனகராசன் கூறிய சொல்லம்பு என் உள்ளத்தில் தைத்துக் கொண்டுள்ள வரை யில் மணவினே முடிவுதான் நிச்சயமாகும் என்று சொல்ல முடியுமா? முடியாது நீ போய்விடு' என்ருன்.

இதற்குள், ஒருவன் ஐயா டாக்டரையா இந்த ஏழையின் உயிர் எமலோகத்திற்குப் போய்க்கிட்டிருக்கு. இப்ப வந்து அந்தப் பணக்கார மகாராசியோட வாதம் பண்ணிக் கிட்டு இருக்கிறீங்களே. இதை கவனியுங்க

முதல்! என்றான். உடனே செல்வநம்பி பக்கத்திலிருந்த தென்றலிடம் இந்தக் கிழவனுக்கு மருந்து கொடு. நான் போய் வருகிறேன் என்று கார் உள்ள விடத்திற்குச் செல்கிறான்.

12. தந்தை தாய்க் காணலும் தேர்தலில் வெற்றியும்

காரில் ஏறிச் சென்ற செல்வநம்பி கலாவதியின் காருக்கு முன்னாலேயே தன்னுடைய காரை வேகமாக ஓட்டிச் சென்றான். செல்வ நம்பி காரை விட்டு இறங்கிவேகமாக உள் செல்லுகிறான். கலாவதியும் காரில் வந்து இறங்கி செல்வ நம்பிக்குப் பின் செல்லுகிறாள். செல்வநம்பி மாடி வாசலில் அடி எடுத்து வைக்கும் போது உள்ளிருந்த கனகராசன் செல்வநம்பியைப் பார்த்து அவனை— நோக்கி வேகமாக வந்தான்; கைகள் செல்வ நம்பியைக் கட்டித் தழுவின. செல்வநம்பியும் உவகைப் பெரு மூச்சுடன் கனகராசனைக் கட்டித் தழுவினான். பழமை ஏடுகள் புரள்கின்றன. இக்காட்சியைக் கண்ட கலாவதியும் துன்பக் கண்ணீரும் கலந்து வடித்தாள்.

செல்வ நம்பி வந்தான். தன்னுடைய திறமை எல்லாம் அமைதியிலாழ்த்தி நம்மால் முடிந்த வரையில் முயன்று பார்ப்போம். சில ஆண்டுகளாவது வாழட்டும் என்று மருத்துவம் செய்தான். சிறிது நேரத்திற்குப்பிறகு, 'இன்னும் கொஞ்ச நேரத்தில் எப்படி இருக்கிறதென்று ஆள் மூலம் சொல்லி அனுப்புங்கள். வீட்டண்டை ஒரு ஏழையின் உடல் நிலை எப்படி உள்ளதோ சென்று கவனிக்கிறேன்' என்று கூறி விட்டுக் காரில் ஏறிப் புறப்பட்டு வந்துவிட்டான்.

கலாவதியும் காரில் ஏறி வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்றாள். ஓட்டு உரிமையை டாக்டர் பெட்டியில் அளித்து வீட்டுக்குத் திரும்பி விட்டாள்.

டாக்டர் செல்வ நம்பி, தன் மருத்துவச் சாலைக்கு வருவதற்குள் தென்றல் வந்த வயோதிகரின் உடல் நலனை ஒருவாறு கவனித்து வைத்துள்ளான். செல்வநம்பியும்கவனித்தான். குணமாகும் என்ற நம்பிக்கை வந்தது.

சிறிது நேரத்திற்குப் பிறகு மருதமுத்துவின் வீட்டிலிருந்து ஆள் வந்து விட்டது. கொஞ்சம் குணமாகத்தான் இருக்கிறது என்ற தகவலைத் தெரிவித்தது. செல்வநம்பிக்கு மேலும் மகிழ்ச்சிதான்.

மறுநாள் தேர்தலில் செல்வநம்பிக்குத் தான் வெற்றி கிடைக்கப் போகிறது என்று எண்ணியவர்களுள் சிலர் மாலைகளை வாங்கிக் கொண்டு வந்து வரிசையாக நிற்கின்றனர். ஊர்வலத்திற்காக கார் வெளியில் தயாராக உள்ளது.

மயக்கத்தோடு இருக்கிற மருத முத்துவை அன்று காலையிலும் கூட பரிசோதித்து விட்டு வந்தான் செல்வ நம்பி.

மருத்துவச் சாலையில் தாத்தாவின்உடல் பெரிதும் குணமாகவே தெரிந்தது. செல்வ நம்பி அவருடைய முகக்குறியை உற்றுப் பார்த்தான். ஒரு வகை அமைதி உணர்ச்சி தோன்றியது செல்வ நம்பிக்கு. 'நீங்கள்யார்? என்று தாத்தாவைக் கேட்டான். சொல்லுவதற்குச் சிறிது தயங்கினார். கண்களின் ஓரங்களில் கண்ணீர் பெருக்குச் சேர்ந்தாற் போல வெளி வருகின்றன. இதற்குள் பக்கத்தில் இருந்த தென்றல் 'எங்கள் மாமா' என்றான். 'உங்கள் மாமாவா...? என்று கோபப் பார்வையில் கேட்டான் செல்வநம்பி.

சேதுபதியும் இன்று செல்வ நம்பியைக் காண வந்துவிட்டான். அவன் வரும்போது ஓர் கிழவியை செயலற்ற நிலையில் கொண்டு வந்தான். அவள் வழியில் செயலற்றுக் கிடந்தாளாம். அவள் வேறு யாருமல்ல பொன்னியம்மாளேதான்.

பொன்னி அம்மாளைக் கண்டதும்செல்வ நம்பிக்கு ஒன்றுமே புரியவில்லை. பக்கத்திலிருந்த சேதுபதி, 'செல்வநம்பி! உடம்பு நிலையை கவனி. முதலில் வாயைத் திறக்காதே' என்று சொல்லி அடக்கினான்.

தன் தாய் பொன்னியம்மாளின் உடல் நிலையைப் பார்த்தான். உடம்புக்கு ஒன்றும் இல்லை. உணவு இல்லாமையால் களைப்பு வந்து விட்டது. உடனே, தண்ணீர் சிறிது கொடுத்தான். சிறிது நேரத்திற்குள் சோற்று நீர் கொடுத்தனர். இன்னும் சிறிது நேரத்திற்குள் காப்பி கொடுத்தனர். கஞ்சியும் கொடுத்தனர். சிறிது நேரத்தில் களைப்பு நீங்கியது.

செல்வ நம்பி, 'அம்மா! என்று அருகில் சென்று உட்கார்ந்தான். தாயும் அவனை

உற்று உற்றுப் பார்த்தாள். தன் மகன் இவ்வளவு உயர்ந்திருப்பான் என்று அவள் எண்ணியும் கூடப்பார்க்கவில்லை. 'ஆ.............!' செல்வ நம்பியா? என்று சொல்லிக் கொண்டே எழுந்து உட்கார்ந்து கொண்டு, 'செல்வநம்பி! என்று அவன் கன்னங்களைத் தன் இருகைகளாலும் பற்றிக் கொண்டு முகத்தோடு முகம் வைத்து முத்தம்கொடுத்தாள். செல்வ நம்பியும், 'அம்மா! என்று ஆர்வமுடன் தாயைக் கட்டி அணைத்தான்.

நோயாளியாய் வந்து சேர்ந்த கிழவன் நகர்ந்து அங்கு வந்தார்.

பொன்னியின் முகத்தை இமை கொட்டாமல் பார்த்தார். நன்ருகப் பார்த்தார். அவர் பொன்னியின் கணவர் பொன்னுசாமி முதலியார் என்றறிந்து கொண்டனர். 'பொன்னி! என்று துடித்தார் பொன்னுசாமி முதலியார். 'ஆ! நீங்கள்! செல்வ நம்பி! உன் அப்பா உன் அப்பா என்று சொல்லிக் கொண்டே எழுந்து சென்று அவரைக் கட்டிக்கொண்டாள் பொன்னி. இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன் காதல் உணர்ச்சியுடன் கட்டித் தழுவிய பொன்னியின் உடலை இப்பொழுது அன்பு உணர்ச்சியுடன் கட்டித் தழுவினர். அவர்கள் இருவரும் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லை சொல்ல முடியுமோ! அப்பா! என்று அலறி ஓடித் தந்தையை நெருங்கினன் செல்வ நம்பி. பிள்ளைப் பாசம் எவ்வளவு பெரியது என்பது அவரைப் பார்த்தால் தானே தெரியும்? அந்த இடத்தில் ஒரே உள்ளம் கொண்ட மூன்று வடிவமாயினர் அவர்கள். தெருவில் செல்வ நம்பிக்கே வெற்றி...........டாக்டர் செல்வ நம்பிக்கே வெற்றி என்ற கோஷம் பெருகிக்கொண்டே வந்தது. இந்த ஒலியும் அங்குள்ளவர் காதுகளில் விழுந்தது.

சீக்கிரமாகவே மருதமுத்துப்பிள்ளை சுகமடைந்து விட்டார். செல்வ நம்பியின் உழைப்பும், சிகிச்சையுமே காரணம். செல்வ நம்பி மருதமுத்துப் பிள்ளையை தன் வைத்திய சாலைக்கு அழைத்துப் போக வந்திருந்தான். அவரும், அவனோடு புறப்பட்டார். கலாவதி அவர்களோடு சென்ருள்.

செல்வநம்பியின் வைத்தியசாலைக்குள் நுழைந்ததும் மருதமுத்துப் பிள்ளை

MANIYAM INDUSTRIAL & ENGINEERING WORKS,
Government Approved Fabricator & Contractor,

(Regd. No. S. 5.)
A. C. C. CEMENT STOCKIST

32, Sankari Road, Trichengode, (Salem Dt.)

(சென்னை அரசினர் உதவி பெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப் பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக்கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.



அஸ்ஸாம் மலைச்சாரலில் வசிக்கும் மக்கள் நன்கு உழைக்கக் கூடியவர்கள். நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள காரோ மங்கை இவர்.

பொன்னுசாமி முதலியாரையும், பொன்னியம்மாளையும் கண்டார். ஒருவரை யொருவர் அறிமுகம் பண்ணிக்கொண்டனர். எல்லோரும் பலவருடங்களுக்கு முன் நெருங்கிப் பழகியவர்களென்றும், உறவினர்களென்றும் விளங்கிக்கொண்டனர். புயலடித்து தன் வாழ்க்கையைப் பாழாக்கி விட்டதால் கடனுக்கஞ்சி மனைவிமக்களைவிட்டு தான் சிலோனுக்கு ஓடிவிட்ட விபரத்தைபொன்னுசாமி முதலியார் விளக்கிச் சொன்னார். கணவன் தன்னையும் தன் மக்களையும் கைவிட்டுச் சென்றபின் தான்பட்ட கஷ்டங்களையெல்லாம் விவரித்தான் பொன்னியம்மாள். தன்னால் வளர்க்க முடியாத நிலையில் முல்லையை மருதமுத்து வீட்டில் விட்டுச் சென்றதையும், செல்வ நம்பியோடு தான் உழவர் வீட்டில் தங்கியதையும், செல்வ நம்பி படிப்பில் அவா கொண்டு தன்னைவிட்டுப் பிரிந்து சென்றதையும் தான் அவனைத் தேடி புறப்பட்டு பல ஊர்களில் அலைந்து கடைசியாய் சேதுபதி வீட்டில் வந்து தங்கியதையும் விவரித்துக் கூறினாள் பொன்னியம்மாள்.

இந்த விபரங்களையெல்லாம் கேட்டு மருதமுத்தும் மற்றவர்களும் ஆச்சரியமடைந்தனர். தான் வளர்த்த பெண் மல்லிகா, செல்வ நம்பியின் தங்கை யென்றறிந்து வியப்படைந்தார் மருதமுத்து. திகைப்படைந்தான் கனகராசன்.

செல்வநம்பிக்கும், கலாவதிக்கும் திருமணம் சர்வ ஆடம்பரங்களொடு நடந்தது. தென்றலுக்கும் முல்லைக்கும் அதே நேரத்தில் மணம் நடந்தது. இவர்களுக்கெல்லாம் முன் நின்று மணவினைகளை முடித்துவைத்த கனகராசன் சீக்கிரமாகவே தன் தகுதிக்கேற்றபடி ஓர் பெரிய விடத்துப் பெண்ணை மணந்தான்.

இன்றும் செல்வநம்பி வைத்திய தொழிலையே செய்து வருகிறான்.

இன்பம் எங்கும் பொங்கியது
"எண்ணிய எண்ணியாங் கெய்துப
எண்ணியார்
திண்ணியரர்கப் பெறின்" தமிழ்மறை.

முற்றிற்று.

சிறு தொழில்கள்

போமேட் (Pomade)

நவநாகரிகப் பொருள்களில்(LAXURIES)பேர்மேடும் ஒன்ருகும். ஒழுங்குறபடியாத சிகையை படிய வைக்கவும், நல்ல மணந்தரவும் கூடிய போமேடை பெரும்பாலோர் உபயோகிக்கின்றனர். உழைப்பு சொற்பம், ஊதியம் அதிகம்.

மூலப்பொருள்கள்

1 வாஸிலைன் பவுண்டு 1

2 பாரபின்வாக்ஸ் ,, 1/8

3 சிகப்பு அல்லது பச்சை (oil green or oil red colour) ட்ராம் 1/8 முதல் ¼

4 லிலாக் காம்பவுண்ட் (சென்ட்) அவுன்ஸ் ¼

5 பான்ஸிபாக்கெட் சென்ட் அவுன் ¼

செய்பாகம்

முதலில் பாரபின் வாக்ஸை இரும்பு வானலில் அல்லது வெங்கலச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி இளஞ்சூட்டில் உருக்கிக் கொள்ளவும், முற்றும் உருகியபின் வாஸிலைனே அதில் போட்டு கீழே இறக்கிக் கொண்டு கலரை அதில் இரண்டற கலந்து உறவாகுமாறு கலக்கவும், கடைசியாய் சென்ட் வகைகளை சேர்த்து புட்டிகளில் ஊற்றி உறைய விடவும். நன்கு உறைந்தபின் புட்டிகளைத் துடைத்தெடுத்து கவர்ச்சியான லேபிள் ஒட்டிவிற்பனைக்குக்கொண்டு வரலாம்.

ஓமத்திரவம்

மூலப் பொருள்கள்:

1. ஓமவிதை வீசை 2
2. சுக்கு சேர் 1/8
3. கிராம்பு ,, ¼

செய்பாகம்

சுக்கு, கிராம்பு இரண்டையும் நசுக்கி ஓமத்தோடு சேர்த்துக் கொள்ளவும். அந்தக் கலவையை வாலையிலிட்டு திரவமாய் வடித்தெடுக்க வேண்டும். 24 அவுன்ஸ் அளவிலுள்ள

கே. ஜி, ராஜு

பெரிய புட்டிகள் 36 - கொள்ளும் அளவுக்கு திரவம் எடுக்கலாம். சிறந்த தயாரிப்பு இது. சிறுவர் முதல் பெரியவர்கள் வரையில் உபயோகிக்கலாம்.

போலி ஓமத்திரவம்

வாலையில் எடுக்கும் ஓமத்திரவமே சுத்தமானது. வேறு முறைகளில் தயாரிப்பது அவ்வளவு உசிதமானதல்ல. பெரும்பாலும் தெருக்களில் தூக்கி விற்பனை செய்பவர்கள் வாலையில்வடித்தெடுத்த திரவத்தை யெடுத்து வருவதில்லை. வாலையிலிருந்து திரவம் வடிப்பதில் முயற்சியும் அதிகம்; விறகுச் செலவும் அதிகம். இவையெல்லாம் இல்லாமல் சுலபமாக ஓமத்திரவமெடுத்து வந்து விற்பனை செய்துவிடுகின்றனர். வாலையிலெடுத்த ஓமத்திரவத்திற்கும், போலி திரவத்திற்கும் வித்தியாசமேதெரிவதில்லை. போலிதிரவத்தால் நன்மை அவ்வளவாய் ஏற்படாதாயினும் தீமை உண்டாவதில்லை. போலித்திரவம் தயாரிப்பது இப்படித்தான். சுடு நீரில் ஓம உப்பை (தைமால்) தூள் பண்ணிப் போட்டுக் கொள்வதோடு முடிந்து விடுகிறது. காரம் விறுவிறுப்பு இவைகளில் வித்தியாசமிராது. ஆகையால், போட்டிக்கும் விலைக் குறைவாய்த் தருவதற்கும் இந்தப் போலித் தயாரிப்பு சிறந்ததாகும்.

(அடுத்த பக்கம் பார்க்க)

நமது சிலோன் ஏஜண்ட் :

வெஸ்டர்ன் நியூஸ் ஏஜன்ஸி,

170, உல்பெண்டால் தெரு,

கொழும்பு—13. சிலோன்.

பிளாஸ்டிக்

—[கார்த்திகேயன் - லாவண்யராஜ்]—

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பாத்திரங்களில் தயாரிக்கப்படும் இரசாயனப் பொருள்கள், இந்த P. V. C. பிளாஸ்டிக் லைனிங் இருப்பதால் தயாரிக்க உதவும் பாத்திரங்கள் கெடாதவாறு பாதுகாக்கிறது. நீர்ப் புகாத் துணி செய்ய, மின்சாரக் கம்பிகள் மீது சுற்ற, மழைகால ஓவர்க் கோட்டுகள் செய்ய, செருப்புகள் தயாரிக்க டை பிளாஸ்டிக் உதவுகிறது.

IV செல்லுலோஸ் நைட்ரேட்— & செல்லுலோஸ் அசிடேட்:— மரம் அல்லது பருத்தித் துணியின் துணுக்குகளின் மீது நைட்ரிக் அமிலம் சேர்த்தால் செல்லுலோஸ் நைட்ரேட் என்ற பொருளும், அசிட்டிக் அமிலம் சேர்க்கப்பட்டால் செல்லுலோஸ் அசிட்டேட் என்ற பொருளும் கிடைக்கிறது. செல்லுலோஸ் நைட்ரேட் என்பது செல்லுலாயிடு. தற்காலத்தில் செல்லுலோஸ் அசிட்டேட்டுதான் அதிகமாக உபயோகப்படுகிறது. தீப்பற்றா பிலிம், பலவித வார்னிஷ் வகைகள் தயாரிக்க இது அதிகமாக உபயோகப்படுகிறது.

V பாலி எத்திலன் — (Polyethylene)—எத்திலின் என்னும் வாயு அதிக அழுத்தத்திற்கும், உஷ்ணத்திற்கும் உட்படுத்தப்பட்டால் வெண்ணிறமான, ஒளி கசியும் இப்பொருள் கிடைக்கிறது. இது எளிதில் வளையும் தன்மையும், கடினத்துவமும் வாய்ந்தது. மிக இலேசான துங்கூட. தண்ணீர் மற்றும் பல இரசாயனப் பொருள்களால் பாதிக்கப்படாது. அதனால் இரசாயனத் தொழிலில் குழாய்கள் தயாரிக்கவும், உட்புற லைனிங் பொருளாகவும் இது பயன்படுகிறது. அதிக அழுத்தமுள்ள மின்சாரத்தைப் பரப்பும் இடங்களில் இது மின் கடத்தாப் பொருளாக (Insulator) உபயோகப்படுகிறது.

VI பாலிமிதைல் மிதாக்கிரிலேட் —(PolymethylMethacrylate) இது பெட்ரோலியம் எண்ணெயிலிருந்து கிடைக்கும் அகரிலிக் அமிலத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது. வியாபாரத் துறையில் இதன் பெயர் "பெர்ஸ்பெக்ஸ்" (Perspex) இதைத் தவறுதலாகக் கண்ணாடி என்றுங்கூட சொல்லுவர். ஏனெனில் இது கண்ணாடியைப் போல ஒளி ஊடுருவிச் செல்லக்கூடிய பொருள். ஆகாய விமானத்தொழிலிலும், விளக்குத் திட்டங்கள் அமைப்பதிலும் இந்த வகைப் பிளாஸ்டிக் முக்கியமாக உபயோகப்படுத்தப்படுகிறது. இதில் பலவித வர்ணங்களை ஏற்றலாம்.

VII பாலிஸ்டிரின் (Polystyrene) — இது நிலக்கரியிலிருந்து கிடைக்கும் "பென்ஸீன்" என்ற பொருளையும், பெட்ரோலியத்திலிருந்து கிடைக்கும் எத்திலின் என்ற பொருளையும் ஒன்று சேர்த்துத் தயாரிக்கப்படுகிறது. இது ஆறும் முறையில் சொல்லப்பட்ட பிளாஸ்டிக் வகையைச் சார்ந்த குணமுடையது. உபயோகங்களும் அதையொத்ததுதான். ஆனால் மின்சாரத் தொழிலில் இந்த பிளாஸ்டிக் தான் அதிக அளவில் பயன்படுகிறது.

VIII நைலான் (Nylon)— தற்பொழுது நைலான் புடவைகளைப்பற்றிக் கேள்விப்படாதார் இலர். கைத்தறி, மில் புடவைகளுக்குத் தனி மகத்துவமிருப்பினும் இரசாயனப் பொருள்களைக் கொண்டு செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட இந்த நைலான் புடவைகளின் மீது தனிமோகம் பெண்டிர்க்கு இருக்கத்தான் செய்கிறது. இதை முதன் முதல் அமெரிக்காவிலுள்ள டுப்பாண்டு-டி-நெமர்ஸ் கம்பெனியாரின் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டது. இதன் இரசாயன அமைப்பைப்பற்றி விரிவாக உரைப்பது எளிதன்று. முதலில் நைலான் நூலைக் கொண்டு "ஸ்டாக்கிங்ஸ்" செய்தார்கள். தற்போது நெசவுத் தொழிலில் இது உபயோகப்பட்டு பலவித கவர்ச்சிகரமான துணிகள் செய்யப் பயன்படுகிறது. இது உறுதி மிக்கது. அதிகத் தேய் வடையாது. தண்ணீர், இரசாயனப் பொருள்களால் பாதிக்கப்படுவதில்லை. ஆகையால் வீட்டுக்கு வேண்டிய பல பொருள்களை இதிலிருந்து தயாரிக்கின்றனர்.

IX கேசீன் பிளாஸ்டிக்:— கேசீன் என்னும் பொருள் பாலிலிருக்கிறது. பாலை திரியச் செய்தால் இப்பொருள் கிடைக்கும். இதை எடுத்து தண்ணீரில் கழுவி, காற்றிலுலர்த்தி பொடியாக்கப்படுகிறது. இந்த தூள் தண்ணீர் சாயங்கள் இவற்

றுடன் கலந்து பக்குவப்படுத்தப்பட்டு குச்சிகளாகவும் தடுகளாகவும் மாற்றப்படுகிறது. கேசின் பிளாஸ்டிக்கினால் பித்தான்கள், பொம்மைகள், ரேடியோ பெட்டியின் சில பாகங்கள், மின்சாரக் கருவிகள் முதலியன செய்ய உபயோகப்படுகிறது. இப்பத்தியில் சொல்லப்பட்ட வகையில் கேசீன் பிளாஸ்டிக் தயாரிக்கப்பட்டால், அது தெர்மேர்பிளாஸ்டிக் வகையைச் சார்ந்தது. இவ்வகைப் பிளாஸ்டிக் 1904ல் கண்டுபிடிக்கப்பட்டது இந்த பிளாஸ்டிக் அனேக வர்ணங்களை ஏற்கும்.

இக் கட்டுரையில் வெளியான பிளாஸ்டிக் வகைகள் தான் முடிவானவை என்று சொல்வதற்கு இடமில்லை. வருடம் தோறும் ஏதேனும் ஒன்றிரண்டு புதுவகை பிளாஸ்டிக்குகள் தயாரிக்கப்படுகின்றன. பிளாஸ்டிக் உபயோகப் படாத துறையே இருக்க முடியாது என்று தோன்றுகின்றது. பிளாஸ்டிக்குகளைக் கொண்டு புதுமுறையில் பிளாக்குகள் (Blocks) தயார் செய்யும் முறையும், போட்டே படங்கள் தயாரிப்பதில் புதுமுறையும் அமெரிக்காவில் கண்டுபிடித்திருப்பதாக தற்போது செய்திகள் கூறுகின்றன.

பிளாஸ்டிக் மிக மலிவான பொருள்களிலிருந்து தயாரிக்கப்படுகிறதென்பதை அறிந்தோம். பிளாஸ்டிக் கண்டுபிடித்தது முதல் ஒவ்வொரு ஆண்டும் அதன் உபயோகமும், முறையும் மாறிக்கொண்டே போகிறது. தற்போது பெரும்பாலான பொருள்கள் பிளாஸ்டிக்கினால் செய்தவைகளாயுள்ளன. எல்லோரையும் கவரக்கூடிய வகையில் பிளாஸ்டிக் பொருள்கள் காட்சியளிக்கின்றன. இன்னும் சில ஆண்டுகளில் எந்த வேலைக்கும் பிளாஸ்டிக் பொருள்களை உபயோகிக்கலாம். இயந்திரங்களில் கூட அதிக அளவு பிளாஸ்டிக் பொருள்களாக உபயோகிக்க நேரிடும். உலோகத்தின் விலையைவிட பிளாஸ்டிக்கின் விலை மலிவாயுள்ளதால் நாம் உபயோகிக்கும் பொருள்களின் விலை குறையும். சிக்கன வாழ்விற்கு பிளாஸ்டிக் பொருள்களும் அடிகோலும். மலிவாக வாங்கும் இப்பொருள்கள் நவநாகரிக வாழ்விற்கு அழ்கையும், ஆடம்பரத்தையும் கொடுக்கும். எவ்வாறாயினும் மற்றைய பொருள்களைவிட பிளாஸ்டிக்கினால் தயாராகும் பொருள்கள் மலிவானவை என்பதை நாம் நினைவில் நிறுத்த வேண்டும். பிளாஸ்டிக்கின் உபயோகம் வளர்க என வாழ்த்துவோம்.

South Indian Printing Co.,

65, N. P. S. STREET, SIVAKASI.

★

We Supply Multi Colour Calenders, Beedi wrapper lables, Soap Wrappers, Soda lables etc., in attractive designs as desired, in prompt time.

சவுத் இந்தியன் பிரிண்டிங் கம்பெனி

65, N.P.S. தெரு, சிவகாசி

★

நாங்கள் எல்லாவிதமான மல்டி கலர் காலண்டர்கள், பீடி ராப்பர்கள், லேபில்கள், சோப் ராப்பர், சோடா லேபில்கள் தேவைக்குத் தக்கபடி கவர்ச்சியான முறையில் தயாரித்துத் தருகிறோம்.

Proprietors:

R. Ganesan,

K. C. Kaliappan.

காதல் புலி

நாடோடி நாட்டியக்காரியின் உள்ளம் சலீமை நாடியது. கோர மனிதனின் உள்ளம் நாட்டியக்காரியை வட்டமிட்டது. சலீம் காதல் பகைக்குப் பலியாகிறான். அக்பரின் எண்ணம் எப்படி ஈடேறிற்று?

நானூறு வருடங்களுக்கு முன்பு, அதாவது 1556-ம் ஆண்டு அக்பர் சிம்மாசனம் ஏறினார். அவர் பட்டத்துக்கு வந்தபோது, கங்கைக்கும் யமுனைக்கும் இடையிலுள்ள பிரதேசம்தான் அவர் ஆட்சிக்குட்பட்டு இருந்தது. நாளடைவில் அவரது தோள் வலிமையும், வாள் வலிமையும் சேர்ந்து வடக்கே இமயத்திலிருந்து தெற்கேவிந்தியம் வரையிலும், மேற்கே ஆப்கானிஸ்தானிலிருந்து கிழக்கே வங்கம் வரையிலும் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே உருவாக்கின.

இந்த நானூறு ஆண்டுகளில், எவ்வளவோ மன்னர்கள் - எப்படியெல்லாமோ தோன்றி மறைந்திருக்கிறார்கள்! அவர்கள் எல்லாம்சரித்திரத்தில் இடம்பெறவில்லை. இடம் பெற்றாலும் அழியாப் புகழைப் பெறமுடியவில்லை! ஆனால் அக்பரை மாத்திரம், இந்துக்களும், முஸ்லீம்களும் அன்புடன் நினைவு கூர்ந்து வருகிறார்கள். அவரை இன்னமும் நாம் பெருமையுடன் கொண்டாடுகிறோம்.

முஸ்லிம்கள் தங்களைத் தீப்பிழம்பாகவும், இந்துக்களைப் பஞ்சுப் பொதிகளாயும் எண்ணி நடந்து வந்தார்கள்.

இந்துக்களும், இஸ்லாமியர்களும், ஒன்றுபட்டு வாழப் போகிறார்களா என்றெல்லாம் ஐயப்பட்ட காலமும் உண்டு.

இவையத்தனைக்கும் - இந்துக்களும், முஸ்லீம்களும் ஒற்றுமையுடனும் அன்புடனும் வாழமுடியும் என்பதை தம் வாழ்க்கையில்சாதித்துக் காட்டிய முன்னோடி அக்பர் சக்ரவர்த்தி. அதற்காக சில படுகொலைகளையும் செய்யத் தயங்கவில்லை அவர்.

அன்றொரு நாள்.........!

தஞ்சை. ஜெயராமன்

சலீம் பிறந்த தினவிழா. மன்னர் மன்னன், தன் மகனின் பிறந்த தின வைபவத்தை வெகு விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தார். நகரே குதூகலத்தில் ஆழ்ந்திருந்தது. எங்கும் கூத்தும், கேளிக்கையும் நிரம்பிருந்தன.

மைதானத்தில் ஒரே கூட்டம். நடுவே இளம் பெண்ணொருத்தி கூத்தாடிக் கொண்டிருந்தாள். கொடி போல் துவண்டிருந்த அவளது அழகிய உருவம், பார்ப்பவரை மயக்கும் வண்ணம் காட்சியளித்தது. மா நிறம் தான. விரிக்கப்பட்டிருந்த பாரசீக ஜமுக்காளத்தின் மீது அவள் அலட்சியமாக வளைந்தும், நெளிந்தும் சுழன்றும் நடனமாடிக் கொண்டிருந்தாள். பைஜாமா அணிந்திருந்தாள். தோள் மூடப்படவில்லை. கரு மேகம் போன்றிருந்தது அவள் கூந்தல். அவள் சுற்றின ஒவ்வொரு சுற்றிலும் அவளுடைய கருவிழிகள் மின்னொளி பாய்ச்சின— சுடர்வீசின.

அவள் தொடர்ந்து ஆடிக் கொண்டிருந்தாள். குழந்தைகளின் அழுகையும், பெண்களின் கூச்சலும் கலவையிட்டன. சாதிசமயமற்ற ஒரு கலப்படமான சமுதாயம் காணப்பட்டது அங்கே. அந்த அற்புத இடம் பெரிய மதுபான்க்கடை போல் காட்சியளித்தது.

ஆயிரக்கணக்கான முகங்களில் ஒன்றுமட்டும் அவளையே நோக்குவதில் லயித்திருந்தது. அந்த முகம் கோரமாயிருந்தது. அந்தக் கோர முகத்தான் அவ்வூர் வாசியாய்த்தான் இருப்பான் போலும்! அவனுக்கு வயது முப்பதிருக்கும், தலையில் வழுக்கை காணப்பட்டது. பெருந்தலை, இருதோள்களுக்கிடையே தலை அமுங்கியிருந்தது. கால்கள் அகன்றும், கைகள் நீண்ட நகங்களுடன பயங்கரமாயுமிருந்தன். மூக்கு நீண்டிருந்தது. தடித்த புருவம், கோரப்பற்கள், இடையிடையே கோட்டை மதில்

மேல்காணப்படும் திறப்புகள் போல் இடைவெளி, ஆயினும், அவன் கண்களில் உணர்ச்சியும், காதல் வெறியும் கொந்தளித்தன. அவன் விழிகள் இமைப்பொழுதும் நாடோடியை விட்டு அகலவில்லை.

ஆடிவாடிக் களைத்துப் போன அந்த நாடோடி, நாட்டியத்தை நிறுத்தினாள். சூழ்ந்திருந்த மக்கள் கைகொட்டி ஆரவாரம் செய்தனர்.

அவள் தப்பட்டையை நீட்டிக்கொண்டே ஒவ்வொருவரிடமும் வசூல் செய்ய ஆரம்பித்தாள்.

கடைசியில் "மஞ்சு" என்று கத்தினாள். வீட்டில் பழகும் நாயைப் போல, ஒரு புலிக்குட்டி ஜமுக்காளத்தில் வந்து நின்றது. அவள் கால்களில் தன் முகத்தை வைத்துக் கொஞ்ச ஆரம்பித்தது.

திடீரென்று கூட்டத்திலிருந்து குரல் ஒன்று எழும்பியது!

"சூன்யக்காரியே! தொலைந்து போ!" இது அந்த கோர சொரூபத்தின் குரல்தான்.

அதைத்தொடர்ந்து பல குரல்கள் கிளம்பின.

"சூனியக்காரி"

"குழந்தைகளைத் திருடுகிறவள்!"

"பயங்கரக் கூட்டத்தைச் சேர்ந்தவள்"

"மந்திரமாயம் கற்றவள்; அவள் நாட்டிலிருக்கக் கூடாது"

இம்மாதிரி கூக்குரலால் அவள் இடிந்து போய் விட்டாள்.

யாரோ ஒரு குறும்புக்காரன் கல்லொன்றை அவள் மீது வீசியபோது, அவள் மிரண்டுபோனாள். பீதியுற்றாள். கையிலிருந்த தப்பட்டை, நழுவி கீழே விழுந்தது. அதிலிருந்த நாணயங்கள் சிதறின!

அவள் ஓட ஆரம்பித்தாள். அவளை விடாமல் கூட்டமும் தொடர ஆரம்பித்தது. நாடோடியை விடாமல், பின் தொடர்ந்த அந்த கோரசொரூபம், அவள் அருகிலிருந்தவர்களை புறங்கையால் பிடித்துத் தள்ளிவிட்டு, அவளைத் தூக்கிக் கொண்டு ஓட ஆரம்பித்தது!

"ஐயோ! ஐயோ!" என்று கத்தினாள் அந்த நாடோடி.

மறைவான ஓரிடத்தில் அவளை இறக்கிவிட்டு, என்னவெல்லாமோ சொல்லிக் கெஞ்சினான் அந்தக் கோர மனிதன். "நான் உன்னைக் காதலிக்கிறேன். நான் வேதனைப்படுகிறேன். அதோ பார்! வெறிபிடித்த ஜனங்கள் உன்னைப் பின் தொடர்ந்து வருகின்றனர். அவர்கள் கையில் சிக்கிவிட்டால், உன்னை சித்ரவதை செய்து விடுவார்கள்."

"நாடோடிப் பெண் எங்கே? நாடோடிப் பெண் எங்கே?" என்று கத்திக்கொண்டே இப்படியும், அப்படியுமாக அவர்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

"இப்போது அவர்கள் பிடியிலிருந்து உன்னைக் காப்பாற்றியிருக்கிறேன், என்னை ஏற்றுக்கொள்!"

பைத்தியம் பிடித்தவள் போல் அவனை நோக்கினாள். "உன்னைப் பார்த்தாலே எனக்குப் பயமாக இருக்கிறது. என்னை விடு, போய்விடு!" அச்சத்துக்கிடையே அவ்வாறு கூறினாள் அவள்.

அவன் தன் கரங்களால் அவளைப்பற்றி பயங்கரமாகச் சிரித்தான். "அழகுதெய்வமே! என்னைத்திட்டு! அடி! என்ன வேண்டுமானாலும் செய்து கொள்! ஆனால் என்னிடம் இரக்கம் காட்டு! என்னை ஏற்க மறுக்காதே! மறுத்தாலும் உன்னை நான் விடப் போவதில்லை! வா" என்று பலவந்தம் பண்ணினான் அவன்.

அவன் கரங்களில் அவள் போராடினாள். அவனோ விடாமல் அவளைத் தழுவினான்!

"ஐயோ!...ஐயோ!" என்று கத்தினாள்—அலறினாள்.

"விடு அவளை" என்று சிம்மம்போல் கர்ஜிக்கும் குரல் கேட்டது. குரல் கொடுத்த வாலிபன் அனாயாசமாய் அவளைத் தூக்கி, தன் குதிரைமீதுள்ள சேனத்தில் உட்கார வைத்தான். அவனது முகவழகைக் கண்டு, ஒருகணம் பிரமித்துப் போனாள். தலையிலிருந்துஉள்ளங்கால் வரை பல்வேறு ஆயுதங்களை அணிந்திருந்தான் அவன். அவன் செய்த உதவிக்கு மகிழ்ச்சி தெரிவிப்பவள் போல், இரு கரங்களையும் அவன் தோள்மீதுபோட்டுக்கொண்டு கொஞ்சும்முகத்துடன் அவனை உற்று நோக்கினாள். "தாங்கள் என்னைக் காப்பாற்றியதற்கு வந்தனம். தங்கள் பெயர்?" என்றுகேட்டாள்.

"சலீம்! அக்பர் பாதுஷாவின் மகன்" என்று அவ

னிடமிருந்து பதில் வந்தது.

புரவி விரைந்தது. புழுதி பறந்தது. கண்ணிமைக்காமல் இதையே பார்த்துக் கொண்டிருந்தான் அந்த கோர மனிதன்!

* * *

வானத்துச் சந்திரன் வந்து வந்து போனுன்!

நாடோடியும், சலீமும் அடிக்கடி சந்திக்கலாயினர். சலீம், அவளுடைய மனதில் காதல் தீயை கொழுந்து விட்டு, எரியும்படிச் செய்து விட்டான். சலீமுடையகாதல் லீலைகளைப் பற்றி அக்பருக்குத் தெரிந்துதானிருந்தது.

வழக்கமாக நாடோடியும், சலீமும் சந்திக்குமிடம். இளங் காதலர் சல்லாபம் செய்து கொண்டிருந்தனர். அவர்களின் சல்லாபம் மேன்மேலும் உணர்ச்சி மிகுந்ததாயிற்று. தன் இடையைச் சுற்றி கரத்தால் வளைத்ததை அவள் ஆட்சேபிக்கவில்லை. அவன் முத்தமிட முயன்ற போது மட்டும் எதிர்த்தாள். புன்னகையும் இன்பக்கண்ணீரும் ஒன்ருேடொன்று கலந்தன.

இக்காட்சியை மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த கோரமனிதனுக்கு என்னவோ போலிருந்தது. இவைகளைக் காணக் காண, அவன் உள்ளம் கொந்தளித்தது.

உன்னை நான் காதலிக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே சலீமை நோக்கினுள் அவள்.

அவளுடைய மொழிகள் சலீமுக்கு தைரியமூட்டியது. ''நீ என்னைக் காதலிக்கிருயா?'' என்று கேட்டுக் கொண்டே அவளைத் தழுவினுன்.

''ஆம்'' என்று அவளிடமிருந்து பதில் வந்தது. இதுதான் சமயமென்று அவளைத் தழுவி முத்தமிட்டான் சலீம். இதைப் பார்த்துக் கொண்டிருந்த குரூபியின் முகம் செக்கச்செவேலென்று சிவந்தது. நறநறவென்றுபற்களைக் கடிக்கும் சத்தம் கேட்டது.

''என் உயிரைக் காப்பாற்றினீர்கள். உங்களை நான் காதலிக்கிறேன். ஆஹா! நீங்கள் எவ்வளவு அழகான உடை அணிந்திருக்கிறீர்கள்?

''அரசாங்க விழாக்களில் நான் அணியும் ஆடம்பர உடையை நீ பார்த்ததில்லையா?''

''இல்லையே?'' என்ருள் நாட்டியக்காரி.

''நீதேன்: நான் வண்டு, தேனிலே வண்டு மூழ்கிக் கிடக்கிறது''

இதைக் கேட்ட அவள் காதல் வெறியில் நிதானமிழந்தாள்.

''நீயோ நாடாளும் மன்னன்! நானே நாடோடி நாட்டியக்காரி! நம் காதல் ஈடேறுமா?'' என்ருள் அவள்.

''பைத்தியக்காரி! ஏன் ஈடேருது? அன்புக்கு உண்டோ அடைக்குந்தாழ்?''

என்ன சொல்கிருள் என்பதை கேட்காமல், அவளைத் தழுவிக்கொண்டிருந்தான் சலீம் அளவுகடந்த அன்புடன், ''நமது நிக்காஹுக்கு பாதுஷா சம்மதிப்பாரா?'' என்று கேட்டுக் கொண்டே தன் கரங்களால் அவன் கழுத்தைச் சுற்றி வளைத்தாள். கெஞ்சிக்கேட்பவள் போல் கண்களை உயர்த்தினுள்.

சலீமின் தலைக்கு மேலே வேறு உருவத்தைக் கண்டு விட்டாள் அவள். அதன் பார்வையில் தான் எவ்வளவு பயங்கரம்? கையில் குத்துவாள் பளிச்சிட்டது. சலீம் அவளைப் பார்க்கவில்லை. அந்த நிலையில் கூக்குரலிடவும் அவளால் முடியவில்லை. குத்துவாளும் கோரமுகமும் அவள் வாயடைத்துப் போகும்படிச் செய்து விட்டன.

குத்துவாள் சலீமின் உடலில் பாய்ந்தது. அலறியபடி குருதிக் கொட்ட தரையில் சாய்ந்தான் சலீம்.

அவள் மூர்ச்சையடைந்தாள். அவள்மூர்ச்சையடைந்து விழுந்த சமயம் தன் இதழ்களில் தீதீண்டுவதைப் போல் உணர்ச்சி ஏற்பட்டதை அவள் உணர்ந்தாள். அது, கோரசொரூபம் இட்ட முத்தத்தால் ஏற்பட்ட உணர்ச்சியே!

இழந்த உணர்ச்சி மீண்டும் வந்தபோது, தன்னைச் சிப்பாய்கள் சூழ்ந்திருப்பதை அறிந்தாள். சலீம் ரத்த வெள்ளத்தில் சவமாய்க் கிடந்தான். ''சலீமைக் கொன்ற கொலைகாரி இவள் தான்'' என்று சொல்லும் சொற்கள் காதில் விழுந்து கலங்கச் செய்தன.

வழக்கு விசாரணைக்கு வந்தது. சலீமைக் கொலை செய்ததற்காக, பாதுஷா அவளுக்கு மரணதண்டனை விதித்தார்.

கல்கத்தாவிலுள்ள இந்திய ஜீவ ரசாயன ஆராய்ச்சி நிலையம். இங்கு மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் தேவையான மருந்துகள் கண்டு பிடிக்கப்படுகின்றன.

மரணத்தருவாயில் அவள் சொன்ன கடைசி வார்த்தைகள் இவைதான். 'எங்கள் உடலைத்தான் பிரித்து விட முடிந்தது. எங்களுடைய தூயஅன்பை அக்பர்பாதுஷாவால் என்றைக்குமே பிரிக்க முடியாது!' என்பதுதான்.

சலீமினுடைய காதல் லீலைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருவதைக் கண்ட அக்பர் பாதுஷா, அதற்கு ஒரு முடிவு காண விரும்பினார், "பெரிய சாம்ராஜ்யத்தை ஆளவேண்டிய சலீம், கேவலம் ஒரு நாட்டியக்காரியுடன் திரிந்து சல்லாபம் செய்வதை" அவர் விரும்பவில்லை அவன் காதலுக்கு ஒரு முடிவு காண, ஒரு சதியாலோசனை செய்தார். இதற்கேற்றாற்போல் நாட்டியக்காரியிடம் அந்தக் கோரமனிதன் கொண்டுள்ள காதலைப்பயன் படுத்திக் கொண்டார். சதிகள் உருவாயின. சலீம், கோரசொரூபத்தால் கொல்லப்பட்டான்.

கன்னி கழியாத அந்த நடனப்பெண் சாகடிக்கப்பட்டாள். அவளுக்காக, இரவு பகலாக வெறிகொண்டலைந்த அந்த கோரமனிதனையும் அக்பர் விட்டு வைக்கவில்லை!

ஒவ்வொரு மூலையிலிருந்தும் அவளைப்பார்க்கும் பொருட்டு, இடுகாட்டு மேடைமீது ஏற்றி நிற்க வைத்தனர் அவளை. அவளோ முற்றிலும் சாந்தமாக தொழுமரத் தருகில் நின்று கொண்டிருந்தாள். சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்த அவளுக்கு, யாதொரு எதிர்ப்பும் சாத்தியமில்லை. அவளுடைய ஆடைகளை விலக்கினார்கள். அவள் நிர்வாணமாக்கப்பட்டதைக் கண்டு எல்லோரும் சிரித்தனர். கட்டுண்ட உடல் அவமானத்தால் நெளிந்து துடித்தது. வேதனையாலும் அவமானத்தாலும் முகம் விகாரமாகியது. ஆயினும் அவள் ஒரு பெருமூச்சுக்கூட விடவில்லை. சமைந்த சிலை போலானாள் அவள்.

அவள் தூக்குமரத்தில் துடித்தது கண்டு யாரும் துயர் உறவில்லை. சூனியக்காரி. கொலைகாரி தொலைந்தாளே யென்று ஆறுதல் தான் அடைந்தனர்.

நமது சென்னை ஏஜண்ட் :

மதராஸ் நியூஸ் ஏஜன்ஸி,

13, நரசிங்கபுரம் தெரு, சென்னை-2

வென்றது யார்?

“ஹரிஹரபுத்திரன்”

[தேர்தலில் நின்ற கலாசாலை மாணவனுக்கும், மாணவிக்குமிடையே ஏற்பட்ட-போட்டிப் போராட்ட வேகம் எதிர்பாரா விதமாய் தணித்தது மாத்திரமல்ல; இருவரையும் மணமக்களாய் பிணைத்தும் விட்டது. வென்றது யார்? மாணவனா? மாணவியா? வென்றது அவளென்றால் கொண்டவனென்ற நிலையடைகிறானே அவன் அடைந்ததென்ன, தோல்வியா?]

எங்கள் கல்லூரியில் தமிழ்ச்சங்க தலைவர் பதவிக்கு தேர்தல் வந்தது.

•

‘ஹியூமானிடிஸ்’ படிக்கும் எங்கள் பிரதிநிதியாய் ரகுவீர் நிறுத்தப்பட்டான். போட்டியைத் தவிர்க்க எதிர் கட்சியாரோடு பேசிப் பார்த்தோம். ஒரு மங்கையை நிறுத்த எண்ணியிருப்பதாக நம்பத்தக்க வட்டாரத்திலிருந்து செய்தி வந்தது. “ஏன், இந்த வருஷம் தான் தலைவர் பதவியை பி. எஸ்ஸிக்கு விட்டு விடுங்களேன். வருஷம் முழுதும் பி. ஏ. தான் வரவேண்டும் என்று என்ன இருக்கிறது?” என்பது எதிர்தரப்புவாதம்.

நாங்கள் நிறுத்தியிருந்த ரகுவீர், பழைய ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்தவன். எங்களைப் போல் அவன் ஹாஸ்டலில் தங்கியிருக்கவில்லை. மதுரையில் உள்ள அவர்களது சொந்த பங்களாவில் இருந்து படித்தான். சமையலுக்கு ஒரு ஆள்; கார் ஒன்றும் தனியாகவுண்டு. நான் தான் அவனுக்கு ஆருயிர் நண்பன், அமைச்சன், தளபதி-எல்லாம். சுருக்கமாகச் சொன்னால் நானின்றி அவன் இல்லை.

ரகுவீர் பெயரை “நாமினேட்” பண்ணி விட்டுத் தட்டிகள், சுவரொட்டிகள், நோட்டீஸ்கள் முதலியவைகளைத் தயாரிப்பதில் முனைந்தோம். எதிர்தரப்பு நிறுத்தியிருந்த ஆளின் பெயரும் வெளியாயிற்று. இறுதி பி. எஸ்ஸி வகுப்பில் படிக்கும் குமாரி ராணி தான் போட்டியிட நிறுத்தப்பட்டாள். ராணியின் பெயரைக் கேட்டவுடனே என் நண்பனுக்கு ஒன்றுமே ஓடவில்லை. செயலிழந்து விட்டான். காரணம், அந்தப் பாழாய்ப்போன ‘காதல்’ தான். ஆமாம், இந்த நான்கு ஆண்டுகளாகவே அவன் ராணிமீது ஒருவகையான ஆர்வம் காட்டி வந்தான். இண்டர் வரை பாரா முகமாக இருந்த ராணி, மூன்றும் ஆண்டில் தான் ‘கடைக்கண்’ அருளினாள். அதிலேயே சொக்கிப் போன என் நண்பன், இந்தப் பார்வை ஒன்றே போதும் என மகிழ்ந்து. அந்த மகிழ்ச்சியில் மூன்ருவது வகுப்பை வெற்றியுடன் தாண்டினான். இந்த ஆண்டுத் தொடக்கத்தில் தான் அவனைப் பார்த்து குமாரி லேசாகப் புன்முறுவல் பூத்தாளாம்! அவனைப் பார்த்துச் சிரித்த அந்த முதல் நாள்-முல்லை நகை கட்டவிழ்ந்த அந்த வண்ணப் பொழுது, ஐயோ, நண்பனுக்கு வகுப்பில் இருப்பே கொள்ளவில்லை. தான் பெற்ற பெரும் பேற்றினை நினைத்து மகிழ்ந்தான். சைன்ஸ் ஹாலை ஓயாது வலம் வந்தான். தன் மகிழ்ச்சியில் இவ்வையமனைத்தும் மகிழட்டும் என எண்ணி, எங்களுக்கெல்லாம் ஒரு பெரும் விருந்தே வைத்து விட்டான். இந்த நிலையில், தனக்கு எதிராக அந்த ராணியே போட்டியிடுகிறாள் என்பதைக் கண்டதும் கலங்காமல் என்ன தான் செய்வான்? “அரும்பியிருக்கும் என் காதல் மலரை இந்தத் தேர்தல் எனும் சூறைக் காற்று அப்படியே கிள்ளி எறிந்து விடுமோ” என்று துடித்தான்; புலம்பினான்; முட்டினான், மோதினான், தலையணையின் மீது!

“தம்பி, உன் கவலைகள் வீணானவை. ஆதார மற்றவை” என்று நான் தேற்றினேன். அன்று இரவு நான் விடுதிக்கும் செல்லவில்லை. ரகுவீருக்கு ஆறுதல் கூறுவதற்குள் விடிந்துபோய்விட்டது. “எனக்கு ராணியை நன்றாகத் தெரியும். ரொம்பவும் நல்ல குணம் உடையவள். ‘ஸ்போர்டிங் ஸ்பிரிட்’ உள்ள பெண். ஆகவே, அருமை நண்ப, காதல் வேறு; தேர்தல்வேறு. இரண்டையும் சேர்த்துக் குழப்பாதே. அவள் மட்டும் தம் சயன்ஸ் குரூப்பிற்காக நிற்கும் போது, நீ ஏன் விட்டுக் கொடுக்கவேண்டும்? நமது ‘ஹியூமானிடிஸ்’ குரூப்பின் முகத்தில் கருந்தேனைப் பூச வேண்டுமா? நீ அவளிடம் காதல் கொண்டுள்ள உண்மையை மெதுவாகச் சுரண்டத்தான் அந்த சயன்ஸ் குள்ள நரிகள் அவளை நிறுத்தி யிருக்கின்றன. நாம் இந்தச் சதிக்கு இரையாவதா?

வேண்டாம், ரகுவீர், வேண்டாம்! காதலைப் பெரிதென எண்ணிய இளைஞன் ஒருவன், 'ஹியூமானி' டிஸைச் சயன்ஸிற்குக் காட்டிக் கொடுத்து விட்டான் என்ற அவச்சொல்லை-தீராப் பழியை நீ ஏற்கக் கூடாது. கணவனும் மனைவியும், அப்பனும் மகனும் தேர்தலில் போட்டியிடுவது உனக்குத் தெரியாதா? போர்க்களத்தில் அவல நாடகம் நடிப்பது அழகல்ல" என்று 'கீதை'யையே உபதேசித்தேன்.

அவன் சற்று அசைந்து கொடுத்தான். மேலும் மேலும் அவனுக்கு உற்சாகமூட்டினேன். அவனுக்கு வெற்றி நிச்சயம் என்றேன். அவன் பெறும் வெற்றி, அவர்கள் காதலை வளர்க்கும் என்றேன். அவ்வளவுதான். ரகுவீர் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பல்பை 'போகஸ்' செய்தது போன்ற ஒளி ஏற்பட்டது. துள்ளிக்குதித்து எழுந்தான். நூறு ரூபாய் நோட்டை எடுத்து என்னிடம் தந்தான். "மணி எல்லாம் நீதாண்டா கவனித்துக் கொள்ளணும் இனி உன் பொறுப்புத்தான்" என்றான்.

தேர்தல் பரபரப்பு கல்லூரியையே கலகலக்க வைத்துவிட்டது. இதை நோக்க, நோக்க, நாட்டின் பொதுத்தேர்தல்கள் தோற்றுவிடும் என்று ஆகி விட்டது. சுவரொட்டிகளும், தோரணங்களும், பேனர்களும், துண்டுப் பிரசுரங்களும் ஒரே அமர்க்களந்தான். எதிர் தரப்பில் ஒரு பெண் நின்றதால் பி. ஏ. வகுப்பில் இருந்த பாவைகள் எல்லாம் தாமே முன்வந்து ஆதரவுப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்து விட்டனர். இதனால் பி. எஸ்ஸி. ஆண்கள் சிலர் கூட எங்களுடன் சேர்ந்து கொண்டனர். பி. எஸ்ஸிக்கும் பி. ஏக்கும் இருந்த போட்டி போய், ஆண்களுக்கும் பெண்களுக்கும் போட்டி என்பது போன்றநிலைக்கு வந்து விட்டது.

"ரகுவீரை ஆதரிக்கும் கூட்டம், ஆண்மைச் சிங்கத்தின் கூட்டமென்று சிறியோர்க்கு ஞாபகம் செய். முழங்கு சங்கே" "தோழர்களே, நீங்கள் ரகுவீருக்கு அளிக்கும் வாக்கு, ஆண் குலத்தின் பெருமையை உலகுக் குணர்த்த, எழும் அழகு மண்டபத்தின் அடிக்கல்" "தேர்தல் நமக்குச் செங்கரும்பு. கரும்பு இனிப்பது இயல்பு என்போம் நாம்"— இத்தகைய முழக்கங்கள் ஓர் புறம். அதற்கு எதிர்ப்புறத்திலேயே, "மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமப்பா, பங்கயக் கைநலம் பார்த்தல்லவோ பாரில் அறங்கள் வளருமப்பா", "சேய்க்குலத் தோரே, நீங்கள் பெண்மை நலத்தைப் பேணிக் காத்தல் உறுதியானால், தாய்க்குலத்தின் மாண்புணர்ந்து, அதற்குத் தலை சாய்த்து வணங்குதல் உண்மையானால்.....சிறுபான்மையினருக்கும் பல ஹீனர்களுக்கும் சம வாய்ப்புகள் தரவேண்டும் என்ற மகத்தான மக்களாட்சிக் கொள்கையை மதிப்பவர்களானால் எங்களுக்கு ஒரு சந்தர்ப்பமளித்துப் பாருங்கள்" இவைபோன்று எத்தனையோ கர்ணப்பட்டன.

தேர்தல் ஜுவாலையின் வெப்பம் அதிகரித்துக் கொண்டே போயிற்று. என் நண்பனின் காதல் தெர்மாமீட்டருக்கும் அந்த நிலைதான். ரகுவீரின் காதல் மொட்டு, இந்தக் கொடும் வெப்பத்தில் வாடிப்போய் விட்டது. ரகுவீரைப் பற்றியும் நேரடியாகவே தாக்கிப் பேசத் தொடங்கி விட்டாள் ராணி. ஆனால் என் நண்பன் மட்டும் கண்ணியத்துடன் நடந்து கொண்டான்.

பெண்கள் கூட்டம் கூட்டமாக எலக்ஷன் 'கேம்பேய்னு'க்கு வகுப்பு தோறும் சென்று ஆதரவு தேடினர். ஆண்களில் பல 'இஞ்சி தின்றதுகள்' அவர்களையே சுற்றி அலைந்தன. 'தன் குலத்தினைத் தூக்கிடும் தாம்புகள்' எனக் குற்றம் சாட்டினோம்; பயனில்லை. ஆனால் ரகுவீரின் பணம் கரைந்ததுபோல எங்கள் ஆதரவுக் கூட்டமும் குறைந்து வந்தது.

•

தேர்தல் நாளும் நெருங்கி விட்டது. என் நண்பன் மிகவும் மனந்தளர்ந்து போய்விட்டான். இந்தத் தேர்தலை ராணி இவ்வளவு 'சீரிய'ஸாக எடுத்துக் கொள்வாள் என்று நான்கூட எதிர்பார்க்கவில்லை. அவளைத் தனியாகச் சந்தித்து, நிலைமையை விளக்கி அவளுக்கு சமாதானம் கூறுவதற்காக ஒரு 'தனிப்பேட்டி'க்கு ஏற்பாடு செய்தோம். ஆனால் பேட்டி கூடத் தர மறுத்துவிட்டாள் அந்த மறத்தமிழ் மங்கை. என் செய்வான் ரகுவீர்? அய்யகோ! இப்பொழுது இரவு எட்டு மணியிருக்கும்; விடிந்தால் தேர்தல். மாலை, மலர்க்கொத்து முதலியவற்றிற்கெல்லாம் 'அச்சாரம்' கொடுத்து விட்டு, பார்க்க அவன் வீட்டுக்குச் சென்றேன். 'வெற்றி நமதே' என்று இன்னும்என் மனம் பாடிக்கொண்டிருந்தது.

கையில் ஒரு கடிதத்துடன் 'கல்லால் அடிபட்ட காதல் மன்னன் கயஸைப்போல் உட்கார்ந்திருந்தான் நண்பன். ஒரு

வேளை தன் காதலுக்குக் கடைசி 'நோட்டீஸ்' அனுப்பி விட்டாளோ ராணி என்று சந்தேகித்தேன், அருகில் வந்தவுடன் என்னை நிமிர்ந்து பார்த்து, கடிதத்தைக்கொடுத்து விட்டுத் தலையில் கை வைத்தவண்ணம் வேறு பக்கம் திரும்பி உட்கார்ந்து கொண்டான். அந்தக் கடிதம் அவன் தந்தை வேங்கைச் சாமியிடமிருந்து வந்திருந்தது.

"சிரஞ்சீவி ரகுவுக்கு...... மதுரை வீரசாமி கிருபையால் சகல சம்பத்தும் தீர்க்காயுசும் உண்டாவது.

இப்பவும், உங்கம்மா, இந்த வருஷமே உனக்குக் கல்யாணம் செய்துவைத்து விடவேண்டுமென்று பிடிவாதம் செய்கிறாள். பெண்ணும் பார்த்து முடிவாகிவிட்டது. பெண் நல்ல அழகு. எல்லாவகையிலும் நமக்கீடான சம்பந்தம். அடுத்த கடிதத்தில் விபரமாக எழுதுகிறேன். வேணும் மதுரை வீரசாமி துணை. (உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்) உன் அப்பா.

அவன் காதலுக்கும் கடமைக்கும் இடையில் கிடந்து 'பேட்மின்டன்' பந்தைப்போலத் தவித்தான். பூவாகி, காயாகி, பழமாகிக் கனிந்து தானே அவன் மடியில் விழ இருந்த அந்தக் காதல் கனியை இந்தத் தேர்தல் சூறாவளி எங்கே பறித்து எறிந்துவிடுமோ என்று பயந்தான். இனிமேல் செய்வதற்கு ஒன்றுமில்லை, விடிந்த பின் பார்ப்போம் என்று இடிந்துபோய் நானும் உட்கார்ந்துவிட்டேன். எங்களுக்கு மிகவும் பிரியமான புரொபசர் ஜோதிமுத்து அவர்கள்தான் முக்கிய தேர்தல் அதிகாரி. மறுநாள் காலை பத்து மணியிலிருந்து ஒரு மணிக்குள் தேர்தலை நடத்திவிட முடிவாகியிருந்தது. இரவில் அவன் தூங்கவே இல்லை. பாவம், என்ன பாடுபட்டதோ அவன் உள்ளம். காலை ஏழு மணியிலிருந்தே நானும் என் குழாமும் கையில் தகரக் குழாய்களுடன் கல்லூரி வாயிலில் நின்று கொண்டு "ரகுவீருக்கே உங்கள் ஓட்டு" என்று தகரக்குழாயே கிழிந்து விடும்படி கத்திக் கொண்டிருந்தோம். ஒரே ஆரவாரம்! கல்லூரிப் பெண்கள் பட்டுப் பூச்சிகளைப் போல் வந்து ஓட்டுப் போட்டுவிட்டுச் சென்றனர். மொத்தம் 842 மாணவர்கள், 11-30 மணியளவில் 840 வாக்குகள் பதிவாகிவிட்டிருந்தன. பன்னிரண்டு மணி வரை காத்திருந்தோம். மற்ற இரண்டு பேர் வரவேயில்லை. எனவே 12 மணிக்கு ஓட்டுகளை எண்ண ஆரம்பித்தோம்.

அறைக்குள் நான் ரகுவீர், ராணி, அவள் தோழி வேணி, புரொபசர் ஜோதிமுத்து, ஒரு கிளார்க்-ஆகியோர் இருந்தோம். ராணிக்குக்கணக்காக 420 ஓட்டுகள்; ரகுவீருக்கும் 420 ஓட்டுகள்! பிரின்ஸிபால் டாக்டர் பைத்தானும் வந்து சேர்ந்தார். தேர்தல் முடிவை அறிவிக்க வேண்டுமே! ரகுவீரை விட்டுக்கொடுக்கும்படி கேட்டார். அவன் 'முடியாது' எனும் வீரச் சொல்லை உதிர்த்து விட்டான். ராணியும் விட்டுக் கொடுக்க மறுத்துவிட்டாள். மறுதேர்தல் வைப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் இப்பொழுது இன்னொரு வழியும் இருந்தது. ஓட்டுப்போடாத இருவரையும் பிடித்து வந்து ஒரு மணிக்குள் ஓட்டுப்போட வைத்து விட்டால் அதில் வருகிற அதிக ஓட்டினை வைத்து முடிவு செய்யலாம் என்றார் பைத்தான் (திருவுளச் சீட்டு போடுதல் சுத்த கர்நாடகம் என்பதால் அதைப்பற்றி யாரும் பேசவில்லை) என் நண்பர்களில் ஒருவன் வேலாயுதம். அவன் நேற்றுத்தான் முக்கிய அலுவலாக தன் ஊருக்குச் சென்று விட்டான் என்று தெரியவந்தது. இன்னொருவன் யாரென்று தெரிய வேண்டுமே!

திடீரென்று துள்ளிக்குதித்தான் நண்பன். இந்தச் சந்தடியில் அவன் ஓட்டுப் போட மறந்து விட்டான். "சார், நான் இன்னும் என் வாக்கைப் பதிவு செய்யவில்லை. அதைப் போடலாமோ?" என்ற வண்ணம் ராணியை அலட்சியமாகப் பார்த்தான் "ஓகே" என்றார் பிரின்ஸிபால். தன் வாக்குச் சீட்டினைப் பெற்றான் ரகுவீர். உடலே குன்ற தலை குனிந்து, ராணியும் அவள் தோழியும் வெளியேறினர் உடனே! வெளியே நின்ற 'கிஸ்கிந்தர்' குழாம் "ரகுவீர் வெற்றி, மாணவர் வெற்றி" என்று கல்லூரியே அதிர முழங்கிற்று. மறு நிமிஷம், ஜோதிமுத்து வெளியில் வந்து, "குமாரி ராணி ஒருஓட்டு

முக்கிய ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள எல்லா

சுதேசமித்திரன்

புக் ஸ்டால்களில்

நமது "தொழில்" கிடைக்கும்

"...அதிகம் பெற்று, தமிழ்க் கழகத் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்" என அறிவித்தார்.

அன்றுமாலை, நானும் நண்பன் ரகுவீரும் அவன் வீட்டில் உட்கார்ந்திருந்தோம். தானே வெற்றி பெற்றது போன்ற மகிழ்ச்சியுடன் இருந்தான் அவன். அப்பொழுது அவனுக்கு ஒரு கவர் வந்தது. பிரித்துப் படித்துவிட்டு, "ஹாஹா" என்று கத்தத் தொடங்கினான். அறைக்குள் பல்டியடித்தான்; பாடினான்; நினைவு வந்ததுபோல கடிதத்தை என்னிடம் தந்தான்; பிரித்தேன்.

"அன்பு அத்தான்"

என்ன திடீரென 'அத்தான்' போடுகிறாள் என மயங்கவேண்டாம். இன்றுதான் அப்பாவிடமிருந்து வந்த அந்தக் கடிதம்—நம் திருமணம் பற்றியது—எனக்கு அந்த உரிமையைத் தந்துவிட்டது. இனி என்றுமே நீங்கள் என் ஆசை அத்தான் தான்.

அத்தான்! தங்களின் பெருந்தன்மையையும், உயர்ந்த பண்பையும் எவ்வாறு விளக்குவேன்? தேர்தலில் தான் எவ்வளவு கண்ணியத்துடன் நடந்துகொண்டீர்கள்! எனக்காக நீங்கள் செய்த தியாகம் பெரிது, பெரிது, பெரிது! தேர்தல் போட்டியை மறந்து காதல் போட்டியில் வெற்றியை நிலைநாட்டிவிட்டீர்கள். அந்தவெற்றி நான் அடைந்ததல்ல, என்னையடைய நீங்கள் அடைந்த வெற்றி அது. அந்தவெற்றி, வானத்தினும் பெரிது! உங்கள் பெருந்தன்மையைப் பாராட்ட என் தோழிகள் உங்களுக்கு ஒரு பாராட்டு விழாவும் விருந்தும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அழைப்பை ஏற்றுக்கொள்ளுங்கள் தய்வு செய்து.

தவறாது வருக. தங்களுடன் பேசவேண்டியவை எண்ணிலடங்கா.

என்றும் தங்கள்

ராணி.

கடிதத்தை நண்பன் கையில் கொடுத்துவிட்டு "சீக்கிரமே விவாகப் பிராப்திரஸ்து" என்று வாழ்த்தினேன்!

M. முகம்மது அப்துல் காதர்

இரும்பு வியாபாரம்

சப் ஜெயில் ரோடு, திருச்சிராப்பள்ளி.



எங்களிடம் பக்கெட், குடம், தொட்டி, ஆலைக் கொப்பரைகள், இரும்பு தகட்டினால் செய்த எண்ணை சட்டி வகையறுக்கள், வடசட்டி ரகங்கள், தோசைக் கல், ரவா தோசை கல்களும், மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

★

இன்னும், காபி கிளப்புகளுக்கும், மிட்டாய் கடைகளுக்கும் தேவையான இரும்பு சட்டிகளும் குறித்த நேரத்தில் ஆர்டர்களுக்கு சப்ளை செய்யப்படும்.

தொழிற் கல்வி வளர்க!

(கவிஞர்-பாரதிமோகன்)

★

படித்துப் பட்டம் பெறுவதற்குள்
பாரிதொகையாய்ச் செலவுசெய்து
முடித்து வெளியே வருபவர்கள்
முனகுதலேனே வாழ்வதற்கு
அடிக்கடி மாடிப் படி ஏறி
அமருவதற்குப் பதவியிலே
துடிக்கும் எத்தனை இளைஞருள்ளம்
துயரம் சொல்லவும் முடியாதே!

பள்ளியின்படிப்பை முடித்தபின்பு
பலவித கைத் தொழில் கற்றிடவும்
உள்ளம் மகிழ்ந்து ஆட்சியினர்
உடனடியாக வழி செய்தால்
எள்ளத்தனையும் பஞ்சமில்லை
இன்பம் பொங்கும் நாட்டினிலே!
கள்ளங் கபடம், பொய் சூதும்,
கனவிலும் நினையார் மக்களெலாம்!

எல்லாருக்கும் கணக்கலுவல்
என்றால் நாடு சிறந்திடுமா?
வல்லமை யோடு "தொழில்" பெருக
வாழ்வு தழைத்து ஓங்கிடுமே
தொல்லையில்லை பூவுலகில்
தொழில்கள் உயர்ந்தால் நாட்டினிலே
அல்லும், பகலும், "தொழில்" வளர்க
ஆவன செய்வோம் உடனடியாய்

விஞ்ஞானத்தால் பல தொழில்கள்
வித, விதமாகச் செய்திடுக!
அஞ்ஞானங்கள் போக்கிவிடில்
அற்புதச் சுடரொளி எங்கணுமாம்!
மெஞ்ஞானந்தான் வளர்ந்தோங்க
மேன்மையாய் வாழ்ந்திடப் பாரினிலே
இப்பெரு நாட்டு மக்களெலாம்
இயற்றுவர் சாதனை நலமோங்க!

ஆயுத பூஜையின் சிறப்பு

இரும்பு எஃகு தொழில் துறையில் முன்னேறியவாராகிய ஸ்ரீ.M.கண்ணன் அவர்கள் 21-10-58 தேதி ஆயுத பூஜை விழாவை தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ ராஜாராம் நாயுடு அவர்கள் தலைமையில் கொண்டாடினர். "தொழில்" ஆசிரியர் ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். சென்னை வால்டாக்ஸ் ரோடு, 30-ம் எண்ணுள்ள அவர் தொழிற்சாலை நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. விழாவின்போது கடையநல்லூர் ஸ்ரீ M. A. மஜீத் அவர்கள் இன்னிசை வழங்கினர்.

ஸ்ரீ ராஜாராம் நாயுடு அவர்கள் ஸ்ரீ. கண்ணன் அவர்களின் தொழில் துறை முன்னேற்றத்தைப் பாராட்டிப் பேசினர். அப்போது அவர் ஆயுதபூசை கொண்டாடுவது வருடத்திற்கு ஓர்முறை தாங்கள் இயற்றியுள்ள தொழிலைப்பற்றி எண்ணி அகம் மகிழ்வதற்கென்றேயென்பதாயும், தொழிலுக்கு வந்தனை செய்வதே முக்கிய குறிக்கோள் என்பதாயும் அவ்வமயம் தொழிலாளிகளும் முதலாளிகளும் தங்கள் ஒத்தமன நிலையைக்காட்டிக் கொள்ள ஏது வேற்படுகிறதென்பதாயும் குறிப்பிட்டார். இவ்வித விழாக்களால் தொழிலாளர்கள் ஊக்கமும் உணர்ச்சியும் கொண்டு உழைப்பதோடு ஸ்தாபனத்தின் அபிவிருத்தியிலும் அக்கறைக் காட்டுமாறு கேட்டுக்கொண்டார்.

கவுன்சிலர் ஸ்ரீ M. பார்த்தசாரதி அவர்கள் வந்தனோபசாரம் கூறினர்.

CITY LIGHT BRAND STEEL TRUNK WORKS

Manufacturers of Steel Trunks
& Consumer Goods

339, Esplanade, Madras-1.

ஸ்டீல் ட்ரங், சூட்கேஸ், கேபின் ரகங்கள், பிலிம்பாக்ஸ்கள், பிலிம் ரேக்குகள், வாளிகள், விவசாயக் கருவிகள், பக்கட்டுகள், பில்டிங் சாமான்கள் குறித்த காலத்தில் ஆர்டர் பேரில் தயாரித்து கொடுக்கப்படும்.

Sole Proprietors:

K. Kannabiran Mudaliar,
K. Radhakrishna Mudaliar.

Sri Marganatha Brand STEEL TRUNK WORKS,

129, N.S.C.Bose Road, Madras-1

Factory: 89, RAJAJIPURAM

Wall Tax Road, Madras-3.

★

MANUFACTURERS OF STEEL TRUNKS, ALLIED PRODUCTS, OF AGRICULTURAL IMPLIMENTS, HOSPITAL REQUIREMENTS, BUILDING MATERIALS AND OTHER IRON AND STEEL MADE PRODUCTS.

●

Branches:

PEACOCK BRAND
Steel Trunk Works,

No. 1, Evening Bazaar, Madras-3.

Sarathy Industries

149, N. S. C. Bose Road,
MADRAS-1.

Prop: K. V. ALWAR.

மருத்துவ சங்கத்தின் சேவை

சென்னை மாவட்ட மருத்துவ சங்க ஆதரவில் 14—10—58 மாலை சென்னை புரொகிரசிவ் யூனியன் உயர்நிலைப் பள்ளி விழா அரங்கில், பாரதி விழா வெகு சிறப்பாகக்கொண்டாடப் பட்டது.

சென்னை தியாகராயர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் திரு. ம. இராசமாணிக்கனர் தலைமை தாங்கி சிறப்புற நடத்தினர்.

தலைவர் தம் உரையில் பாரதியாரின் பாடல்களை நன்கு விளக்கி, சமூக சங்கங்களும், பொது மக்களும், மாணவர்களும் பாரதியாரின் பாடல்களைக் கற்றுப் பயன் பெறும் வழிகளை நன்கு உணர்த்தினர்.

அடுத்து, பாரதியாரின் படத்தைத் திறந்து வைத்த திரு. T. A. சொக்கலிங்கம் அவர்கள் பாரதியார் நாட்டில் மலிந்து கிடக்கும் ஜாதிவேற்றுமை, பெண் அடிமை, மொழி—நாடு இவைகளில் பற்றின்மை இத்தியாதி கொள்கைகள் உடையவர்களுக்கு விரோதியாக விளங்கினர் என்பதை எடுத்துக் காட்டி, பாரதியார்பாடல்களை உள்ளவாறு உணர்ந்து செயல் முறையில் பணியாற்றவேண்டுமென்று வற்புறுத்தினர்.

"தொழில்" ஆசிரியர் திரு K. பெருமாள் உடையார் அவர்கள் பாரதியாரின் விழாவைக் கொண்டாட வேண்டுவதோடு மருத்துவசங்கத்தார், வ. உ. சி. திரு. வி. க. போன்றவர்களின் விழாக்களையும் கொண்டாட வேண்டுமென வற்புறுத்தி நம் அரசாங்கம், பிற்பட்ட மக்களுக்கு செய்துவரும் சேவைகளை மக்கள் சரியாக உணர்ந்து பயன் படுத்திக்கொள்ள வேண்டுமென்று அறிவுரைகள் கூறி பெருமுழக்கம் செய்தார்.

அடுத்துபேசியதிரு. M.S. நடராஜன் அவர்கள் பாரதி விழாவைக் கொண்டாடுவது போல், அவர் காட்டிய வழியைப் பின்பற்றி நடந்து, ஒற்றுமையாக முன்னுக்கு வரவேண்டுமென்று பல சங்க இலக்கிய மேற்கோள்களுடன் அரிய உரைநிகழ்த்தினர்.

திரு M. K. நாகேந்திரன், Dr. V. K. சாமி, நாகசுரசக்கரவர்த்தி திரு. P. நடேசனர், திரு. மு. பொ. நாராயணசாமி, திரு. மருத்துவமணி, திரு. T. V. செல்வராசன் மற்றும் பலர் பேசினர்கள்.

திருவாட்டி T. N. ஆனந்தநாயகி உள்ளிட்ட பல பிரமுகர்கள் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர்.

மாலை 2 மணி முதல்நாகஸ்வர வித்வான் O. R. இசைகோபால் குழுவினரால் வாத்தியக் கச்சேரியும் திரு. K. சொக்கலிங்கம் அவர்களால் இன்னிசையும் முழங்க விழா விமரிசையாக ஆரம்பித்து, தலைவர் முடிவுரைக்குப்பின், பொதுச்செயலாளர் திரு. K. S. ஏழுமலை அவர்களால் நன்றி கூற கூட்டம் இரவு 9 மணிக்கு இனிதே முடிவுற்றது.

சிரிப்பு நடிகர் தங்கவேலு, வாய்ஸ் ஆப் அமெரிக்கா பிரதிநிதி சின்னராஜோடு பேட்டி.

ஏ. டி. எச்.

ஆறுமுகம் டெய்லரிங் ஹவுஸ்

நெ. 16, அருணசல நாயக்கன் ரோடு,

சிந்தாதிரிப்பேட்டை—சென்னை-2.

★

அரசாங்க சர்டிபிகேட் பெற்றவர், பக்கிங்காம் கர்னடிக் மில் துணிகளால் ரெடிமேட் உடைகள் தயாரித்து மொத்தமாகவும், சில்லரையாகவும் தரப்படும். ஒருமுறை எமது காரியாலத்துக்கு விஜயம் செய்து ஆதரிக்கக் கோருகிறேன்.

பூரண உரிமையாளர்:

A. ஆறுமுகம்.

ஏ. டி. எச். டெய்லரிங் ஹவுஸ் திறப்பு விழா

22—10—58 புதன் மாலை சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் திரு. N. ராதாகிருஷ்ண பிள்ளை அவர்கள் தலைமையில் ஏ. டி. எச் மொத்தமாக உடைதயாரிக்கும் ஸ்தாபன திறப்பு விழாநடைபெற்றது. ஸ்ரீ M. ஆதிகேசவலு அனைவரையும் வரவேற்றார். தலைவர் தேசிய வர்தியாயும், தொழிலூக்கத்தில் சிறந்தவராயும் விளங்கும் ஸ்ரீ ஆறுமுகம் அவர்களைப் பாராட்டிப்பேசினர். அ. இ. கா. க. அங்கத்தினர் ஸ்ரீ K. M. சுப்ரமண்யம் அவர்கள் ஸ்ரீ ஆறுமுகத்தையும், அன்னாரின் ஸ்தாபன வளர்ச்சியையும் வாழ்த்திப் பேசினர். கடைசியாய் கதர் கிராம கைத்தொழில் நிலைய தையற்தொழில் பகுதி பொறுப்பாளர் ஸ்ரீ A. சுகுமாரன் அவர்கள் தையல் தொழிலின் சிறப்பையும் ஸ்ரீ ஆறுமுகத்தின் தொழில் முன்னேற்றத்தையும் பாராட்டிப் பேசி வாழ்த்துக்கூறினர்.

உரிமையாளரான ஸ்ரீ ஆறுமுகம் அனைவர்க்கும் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

வருந்துகிறோம்

சிறந்ததேசபக்தரும், முன்னாள் மந்திரி சபையில் தொழில் வர்த்தக இலாகா மந்திரியாய் இருந்தவருமான ஸ்ரீ. சி. பெருமாள் சாமி ரெட்டியார் 69-வது வயதில் நுங்கம் பாக்கத்திலுள்ள தமது இல்லத்தில் காலமானார். அன்னாரின் குடும்பத்தார்க்கு நமது அனுதாபம்.

கைத்தொழில்!

சிறுதொழில்கள் செய்ய வழி காட்டும்

செல்வச்சுரங்கம்

146-கைத்தொழில் முறைகள் அடங்கியது.

தபால் செலவு உள்பட ரூ 2—65

★

தொழிலே திரவியம்

60-கைத்தொழில் முறைகள் அடங்கியது

தபால் செலவு உள்பட ரூ 1—65

முன் பணம் அனுப்பிப் பெறவும்

நவீன கதா நிலயம்,

16, சுப்பராய பிள்ளை தெரு,

சென்னை-1.

இராஜபாளையம் மண்பாண்ட கூட்டுறவு சங்க வேண்டுகோள்

1. எல்லாத்தொழில்களும் கூட்டுறவு அடிப்படையிலே நடைபெறவேண்டும் என்பது அரசாங்கத்தின்குறிக்கோள். ஆகவே நமக்கு வேண்டிய சலுகைகளை கூட்டுறவு முறையில்போராடினல்ஒழிய தனிப்பட்ட அளவில் நாம் எந்தச் சலுகையையும் பெற முடியாது.

2. நாம் உற்பத்தி செய்யும் சரக்குகளை கூட்டுறவு முறையில் விற்பனை செய்தால் போட்டியின்றி விற்பனை செய்து அதிக இலாபம்பெற முடியும்.

3. நாம் உற்பத்தி செய்து கொடுக்கும் சரக்கிற்கு மொத்தமாக பணம் பெற்றுக் கொள்ளலாம்.

4. நமது சரக்கின் மொத்த கிரையத் தொகையில் ரூ 1 க்கு 0—6 ந. பை வீதம் பிடித்தரம் செய்து ரூ 100 சேர்ந்தபின், அசல் ரூ 100-ம் அதற்குரிய வட்டியையும் கொடுக்கிருர்கள். இதற்கு சிக்கன டிபாசிட் என்று பெயர்.

5. சரக்குகளை உற்பத்தி செய்வதற்காக அட்வான்ஸாக தலா 1க்கு ரூ 40 வீதம் கொடுக்கிருர்கள். டை தொகையை சூளை 1க்கு ரூ 1 அல்லது ரூ 2 ஆக கழித்து விடலாம்.

6. சங்கத்தில் கிடைக்கக்கூடிய லாபத்தை வருஷக் கடைசியில் நமக்கே பங்கீடு செய்து கொடுக்கிருர்கள்.

7. நமக்கு வேண்டிய மண், விறகு முதலியவற்றை குறைந்த விலைக்கே பெறலாம்.

8. ஏழை மாணவர்களுக்கு படிப்பதற்கு நிதி உதவி செய்யலாம்.

9. சங்கத்தில் மெம்பராகச் சேர பணவசதி இல்லாதவர்களுக்கு சர்க்காரிலிருந்து பங்குத்தொகை கடனாகக் கொடுக்கிருர்கள்.

10. கூட்டுறவு முறையில் விற்பனை செய்யும் சரக்குகளுக்கு காதிபோர்டிலிருந்து இனமாக "செல்லிங் ஏஜன்ஸ் கிராண்ட்" கொடுக்கிருர்கள்.

11. சேமநிதி உதவி அளிக்கிருர்கள். (சர்க்காரிலிருந்து).

12. நமது சரக்குகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக மூலதனக் கடனாக 3 வட்டிக்கு ரூ 5000 வரையிலும் பம்பாயிலுள்ள காதி கமிஷனிலிருந்து நாம் பெறலாம்.

13. கூட்டுறவு முறையில் 10 அல்லது 15 பேர்கள் சேர்ந்து வேலை செய்வதற்கு வேலைக்கூடங்களை அமைக்க காதிகமிஷனிலிருந்து பாதி இனமாகவும் பாதி கடனாகவும் கொடுக்கிருர்கள்.

நாம் ஏன் கூட்டுறவு சங்கத்தில் சேரவேண்டுமென்று நினைக்காது ஒவ்வொருவரும் தலா ரூ 5—25 ந. பை. வீதம் கொடுத்து சேர் சேர்ந்து

கதர் கிராம உத்யோக் பவன்

ஆண்டு விழா

தீபாவளிக்கு கதர் அணியுமாறு நிதி மந்திரியின் வேண்டுகோள்

17—10—58-ல் சென்னை மவுண்ட்ரோடிலுள்ள கதர் கிராம உத்யோக் பவன் ஆண்டு விழா நிதி மந்திரி ஸ்ரீ சி. சுப்ரமணியம் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. சென்னை கூட்டு அபிவிர்த்தி கமிஷனர் ஸ்ரீ ஜி. வெங்கடாசலபதி அனைவரையும் வரவேற்ருர்.

நிதிமந்திரி கதர் கிராம உத்யோக் பவன் செய்துள்ள வேலையைப் பாராட்டிப் பேசிவிட்டு கிராமமக்களின் நன்மையை மூன்னிட்டு கதரை வாங்கி உடுத்துவதோடு குடிசைத் தொழிலில் உற்பத்தியாகும் பொருள்களையும் வாங்கி ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவர் மேலும் பேசும்போது தீபாவளிக்கு கதரை வாங்கி உபயோகிக்குமாறு பொது மக்களைக் கேட்டுக்கொண்டார்.

த. நா. கா. க. தலைவர் ஸ்ரீ கே. ராஜாராம் நாயுடு, ஸ்ரீ டி. செங்கல்வராயன் ஆகியோர் பேசினர்.

ஸ்ரீ ஆர். சீனிவாசன் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

ஆங்காங்கு கூட்டுறவு சங்கங்களை அமைத்து கூட்டுறவு முறையில் விற்பனை செய்து அதனல் எய்தும் பல நன்மைகளை அடையும்படி வேண்டுகிறேன்.

A. ரங்கசாமி

கலைவானிலே நிலையான ஒளி!

ஓடாதே நில்!

கலைநுட்பக் கருத்தோவியம்!

புதுமையிலும் புதுமை யென்று போற்றி வியக்கும் வண்ணம் அற்புத சாதனை களை திரை ஓவியத்தில் புகுத்தும் "அந்த நாள்" எஸ். பாலச்சந்தர்.



கோபி சகோதரர்களின் "ஓடாதே நில்!" படத்தின் டைரக்டரும், நடிகருமான எஸ். பாலச்சந்தர்.

இந்த நாள் மக்களை வியப்பிலாழ்த்த தானே பிரதான பாத்திரமேற்று நடித்தும், டைரக்ட்டு செய்தும் உருவாக்கும்.

ஓடாதே நில்!

கலா ரசிகர்களின் கண்ணிற்கும், கருத்திற்கும் விருந்தளிக்க விரைந்து வருகிறது......எதிர் பாருங்கள்!

கலையுலகிலே புதுமை கருத்துக்களையும், கலை நுட்பங்களையும் புகுத்த முனைந்துள்ள கோபி சகோதரர்களே இப்படத்தின் துணிச்சலான தயாரிப்பாளர்கள்......

டைரக்டர் பாலச்சந்தர், "அந்தநாள்" படத்தில் ஓர் அரியசாதனையைச் செய்தார். பாட்டும் கூத்துமில்லாமல் அப்பட்டமான அன்றாட நிகழ்ச்சிகளாய்க் காட்டி வெற்றி கண்டார்.

"ஓடாதே நில்" திரை ஓவியத்தில் மற்றொரு நூதனத்தைப் புகுத்துகிறார். இந்திய நாட்டினர் மாத்திரமல்ல, வேறு எந்த நாட்டினரும் பார்த்து வியந்து பாராட்டும் நூதனச் சாதனை அது. முகத்திலே சாயம் பூசாமல், கன்னத்திலே, புருவத்திலே, உதட்டிலே இங்கெல்லாம் வண்ணந் தீட்டாமல் இயற்கை நிறத்தில், எப்போதுமுள்ள அமைப்பில், நடிகர்களை உலவவிடுகிறார் டைரக்டர் பாலச்சந்தர். காணற்கரிய இந்த காட்சிகளை காணும் நாள் தொலைவில் இல்லை.

முக்கிய ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள எல்லா

ஹிக்கின்பாதம்ஸ் புக் ஸ்டால்களில்

நமது "தொழில்" கிடைக்கும்

கலை மணம்

கருத்துரை :

நீலாவுக்கு நெறஞ்ச மனசு

திரு. ஏ. பி. நாகராசன் கை வண்ணத்தால் குழைக்கப்பட்ட சித்திரங்கள் எல்லாமே நல்ல வெற்றியைத் தந்துள்ளன. சமீபத்தில் வெளிவந்துள்ள ராயல் பிலிம் ஸாரின் 'நீலாவுக்கு நிறஞ்ச மனசு' என்ற படமும் நாகராசனின் படைப்புத்தான்.

ஒரு குடும்பத்தில் நான்கு பெண்கள் இருந்தால் எப்படி இருக்கும்? இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கதை தான் நீ. மனசு. வெவ்வேறு குண அமைப்பைக் கொண்டுள்ள அந்த நான்கு பெண்களில் மூத்த பெண்ணை நீலாவை மட்டும் கதாசிரியர் தம்முடைய லட்சியப் படைப்பாக அமைத்துள்ளார். நிறைந்த குணமும் நல்ல பண்பும் வாய்ந்த நீலாவின் பாத்திரம் தமிழ் நாட்டுப்பெண்களின்பிரதிபலிப்பு. பெண்கள் மட்டுமல்ல ஆண்களால் கூட நன்கு மதிக்கப்படும் சிறந்த படைப்பு நீலாவின் பாத்திரம். இதற்குப் பொருத்தமான நடிகை யார்? பண்டரிபாய் தான் நீலாவின் பாகத்தை ஏற்று நடித்துள்ளார். குறை ஏதும் காணமுடியாத அவருடைய நடிப்பு படத்தின் ஓட்டத்துக்கு வழி வகுக்கிறது. தனது இரண்டாவது தங்கையைப் பார்க்க வந்த தங்குகவேலுடன் அசந்தர்ப்ப விதமாக கடைசி தங்கை ராகினி மேல் சந்தேகம் கொண்டு அவளைக் கண்டிக்கும்போது பண்டரிபாய் மட்டுமல்ல ராகினியும் அருமையாக நடித்திருக்கிறார். நீலாவுக்கு நெறஞ்சு மனசு ராகினிக்கு நல்ல எதிர்காலத்தைக் கொடுத்திருக்கிறது. இரண்டாவதுதங்கையாக முத்துலட்சுமி வழக்கம் போல் நகைச்சுவை விருந்தளிக்கிறார். மூன்றாவது தங்கையாக ராஜம் படபட வென்று பேசி திடீர் என்று திருடனைக் காதலித்து கல்யாணம்செய்து கொள்கிறாள். விசித்திரமான குணம் இவருடையது.

ஹாஸ்யம் என்றஒன்றைக் கொடுத்து படம் பார்ப்பவர்களைச் சிரிக்க வைப்பதற்காக வேண்டி சம்பவங்களை மிகைப்படுத்திக் காட்டுவானேன்? குழந்தை யென்ற

ஆம்பிள்ளை ஆடக்கண்டு அதிசயமாய் பார்ப்பதேனே ''சபாஷ் மீனு''!வில் சிவாஜி கணேசனும், சந்திரபாபும்.

144857

பெயரில் நடிக்கும் சம்பந்தம் பரத நாட்டிய (பெண்) உடையால் வந்து ஆட ஆரம்பித்ததும் பின் அப்படியே பஸ்டாண்டுக்கு வந்த அவனை மோகனின் ஆட்கள் தூக்கிக்கொண்டு போய் இவள்தான் மாலா என்று சொல்லி விட்டதும் அவனும் வசனம் பேசுவதும், அதற்குள் குழந்தை தூங்குவதும் நம்பமுடியாத காட்சிகள் மட்டுமல்ல ஏதோ அருவருப்பையும் உண்டுபண்ணுகின்றன.

என்றாலும் சில இடங்களில் நாகராஜனின் வசனங்கள் மிகவும் ரஸிக்கும்மடியாக அமைந்துள்ளன.

பாடல்களை மருதகாசியும் அ. சா. நாராயணனும் இயற்றி இருக்கின்றனர். 'கண்ணைக்கவரும் கலை பரதக் கலை' என்ற பாடலை சூலமங்கலம் ராஜலட்சுமி மிகவும் இனிமையாகப் பாடி இருக்கிறார். கர்நாடக இசையில் இப்பாடலை அமைத்திருக்கிறார் மகாதேவன். 'சிங்கார சங்கீதமே!" என்ற பாடலையும் ராஜலட்சுமியே பாடி இருக்கிறார். வீணையின் நாதத்தோடு இழைந்துவரும் இப்பாடலும், படப்பிடிப்பும் அருமையாக இருக்கிறது. தங்கவேலுவுக்காக லோகநாதன் பாடியுள்ள 'ஒரிஜினலிட்டி' என்ற பாடல் ஏன் அப்படி ஒலிக்கிறதோ தெரியவில்லை.

நான்கு பெண்களின் கதாநாயகர்களின் குண அமைப்புத்தான் பூரணத்துவம் அடையாமல் இருக்கின்றன. மற்றபடி நகைச்சுவைப்படம் என்ற எண்ணத்தோடு பார்த்தால் நீலாவுக்கு நெறஞ்ச மனசு ஓர் நல்ல நகைச்சுவைப் படம் என்பதோடு பெண்கள் மிகவும் கவரக்கூடிய படம் என்பதும் பொருந்தும். —சோ. க.

" மலர்க்கூடை இடையிருக்க மங்கை நல்லாள் மயங்குவதேன் ?"
சபாஷ் மீனாவில் புதுமுகம் மாலா.

பானுமதியின் சொந்தப்படம்

கதாநாயகியாகவே நடித்து ரஸிகர்களின் இதயத்தில் குடிகொண்டுள்ள பானுமதி விதவையாக ஒரு படத்தில் நடிக்கிறார் என்றால் அது ஆச்சரியப்படத்தக்கது தானே! ஆமாம்! அவரது சொந்தப்படக் கம்பனியான பரணி பிச்சர்ஸார் தயாரிக்கப்போகும் படத்தில் பானுமதி ஓர் விதவைப் பாகம் ஏற்று நடிக்கப் போகிறார். கதாநாயகனை நாகேஸ்வரராவ் நடிக்கிறார். அவருடன் ஜோடியாக நடிக்க புதுமுகம் ஒன்றை தேடிக்கொண்டிருக்கின்றனராம்.

சரத் சந்தரரின் பிரபல நாவலைஒன்றைத் தழுவி எடுக்கப் போகும் இக்கதைக்கு வலம்புரிசோமநாதன் வசனம் எழுதுவார். மாஸ்டர் வேணு இசை அமைக்க, திரு. ராமகிருஷ்ணராவ் டைரக்ஷன் பொறுப்பை ஏற்றுள்ளார். படப்பிடிப்பு பரணியில்.

Edited & Published by K. Perumal Udayar, 55, Edapalayam Street, Madras-3.
Printed by K. N. Thiruvengadam, at his Ananda Parvathi Press, 30, Edapalayam Street, Madras-3.
Asst. Editor: K. G. Raju.

Sree Jayalakshmi & Co.,

MAKERS OF CANE FURNITURE

114, ராயப்பேட்டை ஐரோடு, : : மைலாப்பூர், சென்னை-4.



எந்த விதமான உபயோகத்துக்கானாலும் சரி, எப்படிப்பட்ட புது டிசைன்களாக இருந்தாலும் சரி; அவைகளை உறுதியான நல்ல பிரம்புகளைக்கொண்டு, நீடித்த உழைப்பு தரும்படி தயார் செய்து, அழகான கண்ணைக் கவரும் பலநிற இனாமல் வர்ணங்களினால் அலங்கரித்து குறித்த நேரத்தில் டெலிவரிசெய்கிறோம். வெளியூர் ஆர்டர்கள் அடிக்கடி கவனிக்கப்பட்டு நேரம் தவறாமல் புக் செய்யப்படும். உள்ளூர் நபர்கள் ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்யக் கோருகிறோம்.

உரிமையாளர்,

K. N. ராஜன்.

M. KANNAN

Government Approved Fabricator and Contractor

(Regd. 10)

No. 30, Wall Tax Road, Madras-3.

★

PLEASE CONTACT US FOR COLLAPSIBLE GATES,
MAIN GATES, WINDOW GRILLS,
VENTILATORS AND ALL OTHER BUILDING MATERIALS

★

Steel Trusses and erection works undertaken

Specialist in Arc and Gas welding

Stainless Steel, Aluminium Gas cutting works are also undertaken.

Our motto is to satisfy our customers.

சிமெண்ட்

சென்னை நகரில் வசிப்பவர்கள் மட்டும் ஒரு மாதத்திற்கு 5 டன் (தடவை ஒன்றிற்கு ஒரு டன்னிற்கு மேற் போகாமல்) சிமெண்ட், கீழ்க்கண்ட எமது விலாசங்களில் ரெடி ஸ்டாக்கிலிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

1. 15, செம்புதாஸ் தெரு, மதராஸ்-1.
2. சிமெண்ட் கான்கிரீட் ஒர்க்ஸ், 11-A, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, மதராஸ்
3. 283-A, திருவல்லிக்கேணி ஹைரோடு, மதராஸ்
4. 131, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்
5. 73, ஹாரிஸ் ரோடு, புதுப்பேட்டை, மதராஸ்
6. 'ஜயா மான்ஷன்ஸ்' பூந்தமல்லி ஹைரோடு, மதராஸ்
7. 139/2 புரசவாக்கம் ஹைரோடு, மதராஸ்
8. 40, காளத்தியப்ப முதலி தெரு, மதராஸ்
9. 139, மூனா ஹைரோடு, மதராஸ்
10. 105, திருவொற்றியூர் ஹைரோடு, மதராஸ்
11. 14, கச்சேரி ரோடு, மைலாப்பூர், மதராஸ்
12. 3/95, பிராட்வே, (பிராட்வே டாக்கீஸ் அருகில்) மதராஸ்

★

உங்கள் தேவைக்கு அணுகவும் :

M. குப்புசாமி நாயக்கர்,

15, செம்புதாஸ் தெரு,
மதராஸ்-1.

போன் : நெ. 2489, 55649.

ANANDA PARVATHI PRESS, MADRAS-3